மலர்-4 இதழ்-80 டிசம்பர் 16-31 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## மார்கழிதோறும்

# மாணிக்கவாசகரை சிறப்பிக்கும் சிவன்

# முருகன் எப்படி தூங்குவார் முட்டாள்தனமான கேள்வி: வாரியார் பதில்

கிருபானந்த வாரியார் திருமணம் ஒன்றிற்குத் தலைமை தாங்கச் சென்றிருந்தார். அங்கே கடவுள் மறுப்பு கொள்கை கொண்ட எம்.ஆர். ராதாவும் வந்திருந்தார்.

இருவரும் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

திருமண பேச்சுக்கு இடையே நடிகவேள் தனது வழக்கமான கிண்டலுடன், "சாமி. முருகனுக்கு ஆறு தலைன்றானுங்கோ, ராத்திரி தூங்கும் போது எப்படி ஒரு பக்கமா படுப்பாரு.? என்ற அறிவாளித்தனமான கேள்வியை கேட்டார்.



**முட்டாள்தனமானபேச்சு சிரிப்பையும், அறிவாளித்தனமான பேச்சுசிந்தனையையும்தரும்** என்பதற்கேற்ப, கூடி இருந்தவர்கள் அனைவரும் சிரித்தனர்.

வாரியாருடன் வந்தவர்கள் தர்மசங்கடத்துடன் நெளிந்தார்கள்.

வாரியார் புன்சிரிப்புடன், திருமண ஏற்பாடுகளை பார்த்துக் கொண்டு இருந்த மண மக்களின் தந்தையரை அழைத்து, அவர்களிடம் கேட்டார்,

"நேத்து தூங்கினீங்களா?"

அவர்கள் இருவரும் "இன்னைக்குக் கல்யாணத்தை வச்சுக்கிட்டு எங்க சாமி தூங்கறது" என்றார்கள்.

வாரியார், நடிகவேளைப் பார்த்துச் சொன்னார்.

ஒரு குழந்தையின் வாழ்க்கையை நடத்தி வைக்க நினைச்ச இவங்களுக்கேத் தூக்கம் வரவில்லை உலக மக்கள் அனைவரும் எம் பெருமானோட குழந்தைகள். அவருக்குஎப்படி தூக்கம் வரும்? அவருக்குத் தூங்கறதுக்கு நேரம் ஏது?" என்றார்.

இதைக் கேட்ட நடிகர் ராதா தலை குனிந்து யோசிக்கலானார்...

# சுமக்காதே
## தேவையற்றதை

வண்டியில் பயணம் செய்யும் பொழுது உன்னுடைய மூட்டையை ஏன் நீ சுமக்கிறாய்? மூட்டை உன் தலையிலிருந்தாலென்ன, கீழேயிருந்தாலென்ன; அந்த மூட்டையையும் உன்னையும் வண்டிதானே சுமக்கிறது!

மூட்டையை உன் தலையில் சுமப்பதால் வண்டியின் பாரத்தை உன்னால் குறைக்க முடியாது. மூட்டையைச் சுமப்பதால் உன்னை நீயே சிரமத்திற்கு உள்ளாக்கிக் கொள்கிறாய். உலக வாழ்வின் ஓட்டத்தில் உன் தலைவீடு இத்தகையதே!

– இந்து தர்ம சாத்திரம்



# வாழைப்பழம் தேங்காய் கூறும் தத்துவம்

எல்லா தெய்வங்களுக்கும் தவறாமல் வாழைப் பழம் படைக்கிறார்கள். மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால், வாழைப்பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும் கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியைக் காட்டுகிறது. 'எனது இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு!" என வேண்டவே நாம் நமது கடவுளுக்கு வாழைப் பழத்தை படைக்கிறோம்.

அதுபோல் தேங்காய்க்கும் அந்த குணம் உண்டு. அது மட்டுமல்ல தேங்காய், வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை. மாம்பழத்தை நாம் சாப்பிட்டுவிட்டு, கொட்டையைப் போட்டால் அந்த விதையிலிருந்து மாமரம் உருவாகிறது. ஆனால், தேங்காயை சாப்பிட்டுவிட்டு ஓட் டைப் போட்டால் அது முளைக்காது. முழுத் தேங்காயிலிருந்து தான் தென்னைமரம் முளைக்கும்.

அது போல, வாழை மரத்திலிருந்து தான் வாழைக்கன்று வரும். பழம் கொட்டை என்பது கிடையாது. அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள்.



# சாப்பிடும்போது கவனிக்கவேண்டியது



- உண்ணும் தட்டில் அல்லது இலையில் முதலில் காய்கறிகளோ அப்பளமோ பரிமாறாமல் சாதத்தை பரிமாறக் கூடாது.
- கிழக்கு நோக்கிச் சாப்பிட ஆயுள்வளரும். தெற்கு நோக்கிச் சாப்பிட புகழ் உண்டாகும். மேற்கு நோக்கிச் சாப்பிட செல்வம் வளரும். வடக்கு நோக்கிச் சாப்பிடக் கூடாது
- வெங்கலம் அலுமினியம் மற்றும் செம்பு பாத்திரங்களில் சமையல் செய்யக் கூடாது.
- புரச இலையில் சாப்பிட்டால் புத்தி வளரும்.
- வெள்ளித் தட்டில் இலையை பரப்பி அதன் மீது சாப்பிட்டால் நல்ல அழகு அறிவு மன ஒருமைப்பாடு குடும்ப ஒற்றுமை கிடைக்கும்.
- சாப்பாட்டில் முதலில் கீரையோ வத்தலோ இலையில் வைக்கக் கூடாது. இவ்வாறான செயல் அசுப காரியத்தில் மட்டுமே பயன்படுத்த வேண்டிய முறையாகும்.



# மார்கழியின் மகத்துவம்

கார்த்திகை மாதமும் மார்கழி மாதமும் ஆன்மிக மாதங்களாகும், கார்த்திகை சிவனுக்கும், முருகனுக்கும், ஐயப்பனுக்கும் உகந்த மாதம், மார்கழி பெருமாளுக்கும், சிவனுக்கும், அனுமனுக்கும் உகந்த மாதங்களாகும்.

இந்த இரண்டு மாதங்களும் கால சீதோஷ்ண மாற்றம் நிகழும் மாதங்களாகும், குறிப்பாக குளிர் காலம் துவங்கும் மாதங்களாகும், விஞ்ஞானப்பூர்வமாகவும் இந்த மாதங்கள் சிறப்பு வாய்ந்ததுதான்.

மார்கழி மாதத்தில் அதிகாலை சூரியனிடமிருந்து வெளிப்படும் சூரிய கதிர் 'ஓஸோஸான்', மார்கழி மாத காற்று தோலுக்கும், வெள்ளை சிகப்பு உயிர் அணுக்களுக்கும், புற்று நோய்க்கு எதிராகவும், உடல் நலத்திற்கு நன்மையான தாகவும் இருக்கிறது.

இது விஞ்ஞான பூர்வமான அறிவியல் உண்மை.

சிவபெருமானுக்கு உகந்த திருவாதிரை விரதம் மார்கழியில்தான் வருகிறது. இந்த மாதத்தில்தான் மாணிக்கவாசகரை தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டார் சிவபெருமான்.

திருமாலுக்கு ஒருநாள் அறிதுயில் கொடுத்து கண்விழிப்பதை வைகுண்ட ஏகாதசி விரதமாக கடைப்பிடிப்பது இந்த மார்கழி மாதத்தில்தான்.

மார்கழி மாதத்தில் கோலங்கள் இடப்படாத இல்லங்களில் கூட கோலமிட்டு, நடுவில் பசுஞ் சாண உருண்டையை வைத்து அதில் பரங்கி பூவினை வைப்பார்கள். பூக்கள் அதிகமாக பூக்காத இடங்களில் பரங்கி பூவிற்கு பதிலாக ஒரு பூசனிக்காய் பூவையாவது வைப்பதற்கு முயல்வார்கள்.

சூரியனின் இயக்கம் அயனம் எனப்படும். சூரியன் தெற்கு நோக்கி இயங்குவது தட்சிணாயனம். வடக்கு நோக்கி இயங்குவது உத்தராயனம். இவை இரண்டில் உத்தராயனம் உயர்ந்தது என்பர். தட்சிணாயனத்தின் கடைசி மாதம் மார்கழி. மேலும் உத்தராயனத் தொடக்கப் புனித நாள் டிசம்பர் 21. இத்திருநாள் மார்கழியின் ஒருநாள்.

இந்த நாளில் சில கோவில்களில் சிறப்புப் பூஜைகளைச் செய்கின்றனர். ஸ்ரீகிருஷ்ண பகவான் மாதங்களில் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன் என்று பகவத் கீதையில் அருளினார்.

இந்த மார்கழியில் வரும் சிறப்பு வாய்ந்த விரத நாட்களைப் பார்ப்போம்.

### வைகுண்ட ஏகாதசி

மாதத்துக்கு இரண்டு ஏகாதசிகளாக வருடத்துக்கு இருபத்து நான்கு ஏகாதசிகள் வருகின்றன. மார்கழி வளர்பிறையில் வருவது 25வது ஏகாதசி. இதுவே வைகுண்ட ஏகாதசி. வைகுண்ட ஏகாதசியன்று விஷ்ணுவை நினைத்து விரதமிருக்க வேண்டும். துளசி தீர்த்தம் தவிர வேறு எதையும் உண்ணவும், பருகவும் கூடாது.

இரவு முழுவதும் சோர்வில்லாமல் கண் விழித்து, பரந்தாமனைப் போற்றும் பக்திப் பாடல்களைப் பாடலாம். பரதபதம் பெறுவதற்காக பரம பதமும் ஆடலாம். மறுநாள் துவாதசி அன்று விஷ்ணுவை வழிபட்டு விரதத்தை முடிக்க வேண்டும்.

### சொர்க்கவாசல்

வைகுண்ட ஏகாதசியன்று, ஸ்ரீரங்கத்தில் சொர்க்கவாசல் திறக்கப்படுகிறது. காலப்போக்கில் வைணவக் கோவில்கள் அனைத்திலும் சொர்க்கவாசல் திறப்பது, ஒரு திருவிழாவாகவே நடைபெறுகிறது. எல்லையற்ற பலன்களை வைகுண்ட ஏகாதசி விரதம் தருவதால், இவ்விரதம் மிகச் சிறந்ததாக மதிக்கப்படுகிறது. எனவே, `காயத்திரியை விடச் சிறந்த மந்திரமில்லை, தாயை விடச் சிறந்த தெய்வமில்லை, ஏகாதசியை விடச் சிறந்த விரதமில்லை' என்ற வழக்கும் ஏற்பட்டது.

### ஆறு சமய வழிபாடு

மார்கழி மாதத்தில் ஆறு சமயங்களுக்குரிய திருநாள்கள் வருகின்றன. காணாபத்யம்கணபதி வழிபாடு தினமும் காலையில் சாணப் பிள்ளையாரை நிறுத்திக் கணபதியை வழிபடுகின்றனர்.

சைவம்சிவபழிபாடு திருவாதிரை

வைணவம் விஷ்ணு வழிபாடு வைகுண்டு ஏகாதசி



கௌமாரம் முருக வழிபாடு படி உற்சவம்.

சாக்தம் சக்தி வழிபாடு பாவை நோன்பு.

சௌரம் சூரிய வழிபாடு மார்கழி மாத இறுதி நாளன்று கொண்டாடப்படுவது போகிப் பண்டிகை. இதுவே தைப் பொங்கல் விழாவின் தொடக்க நாளாகும்.

### படி உற்சவம்

டிசம்பர் 31ந்தேதி மார்கழியில் பொருந்தி வருகிறது. அந்நாளில், முருகனது திருத்தணி முதலான மலைக்கோவில் திருத்தலங்கள் பலவற்றில் `படி உற்சவம்' மிக்க சிறப்புடன் நடைபெறுகின்றது. பல குழுவினர் மலைப்படிகளின் ஒவ்வொரு படியிலும் நின்று திருப்புகழ்ப் பாடல்களை பாடுகின்றனர்.

### திருவாதிரைத் திருநாள்

மார்கழி பவுர்ணமியுடன் திருவாதிரை நட்சத்திரம் பொருந்தும் நாளே திருவாதிரைத் திருநாள். அன்றைய நாளில் சிதம்பரம்தில்லை நடராஜனைத் தரிசிக்கும் தரிசனத்தை ஆருத்ரா தரிசனம் என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். திருவாதிரைத் திருநாளன்று இறைவனின் முன் களி நிவேதனம் செய்கின்றனர். ஏழு காய்கறிகளைக் கலந்து செய்யும் கூட்டைத் திருவாதிரைக் கூட்டு என்று அழைக்கின்றனர்.

### அனுமன் ஜெயந்தி

மார்கழி மாதம் மூல நட்சத்திரத்தில் வாயு தேவனுக்கும், அஞ்சனாதேவிக்கும் பிறந்தவர் ஆஞ்சநேயர் அனுமன். ஏதேனும் ஒரு நல்ல காரியம் நிறைவேற வேண்டும் என்று அனுமனைப் பிரார்த்திக்க வேண்டும். ராம நாமத்தைக் கூறியவாறே வாலின் தொடக்கத்தில் ஒரு குங்குமப் பொட்டை இட வேண்டும்.

தினமும் இவ்வாறே தொடர்ச்சியாக, இட்டுக் கொண்டு வந்தால், குங்குமப் பொட்டு வரிசை வாலின் நுனிப் பகுதியை அடைவதற்கு முன்னால், அனுமனின் பேரருளால் நினைத்த காரியம் நிச்சயம் நிறைவேறும். அனுமனை வழிபடுகின்றவர்களுக்கு அவர் புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்பு, வாக்கு வன்மை ஆகியவற்றை அருளுகின்றார். காஞ்சி மகா பெரியவர் இந்த வழிபாட்டுமுறையை பிரபலப் படுத்தினார்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த மார்கழியை நாமும் கொண்டாடுவோம்.



# மார்கழிதோறும் மாணிக்கவாசகரை சிறப்பிக்கும் சிவபெருமான்

திருவாசகத்தை இயற்றியவர் மாணிக்கவாசகர், அவர் சொல்லச் சொல்ல இதை எழுதியவர் சிவ பெருமான்.

தில்லையம்பல நடராஜப்பெருமானே அந்தணர் வடிவத்தில் வந்து ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதினார்.

"மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம் பலம் உடையான் எழுதியது" என்று திருவாசக ஏட்டில் கையெழுத்திட்டு சிற்சபையின் பஞ்சாட்சரப் படியில் வைத்து விட்டு சிவபெருமான் மறைந்து விட்டார்.

திருவாசக ஏட்டைக் கண்ட கோயில்அந்தணர்கள் மாணிக்கவாசகரை அழைத்து திருவாசகத்திற்கு விளக்கம் தருமாறு வேண்டினார்.

அவரும் தில்லை நடராஜரின் சன்னதிக்கு வந்துநின்று "அம்பலக்கூத்தனே அதன் பொருள்" என்று கூறி இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

அதனால் "தில்லை பாதி திருவாசகம் பாதி" என்ற பழமொழி உண்டானது.

திருவாசகம் வேறு, தில்லை நடராஜர் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. திருவாசகம் முழுவதும் சிதம்பரப்பெருமானின் திருவடியையே போற்றுகிறது.

திருவாசகத்தில் சிவபுராணம் தொடங்கி, அச்சோ பதிகம் வரை 51 தலைப்புகளில் 658 பாடல்கள் உள்ளன.

மாணிக்கவாசகருக்கு சிறப்பு செய்யும் விதத்தில் சிதம்பரம் நடராஜர் கோயிலில் மார்கழி திருவாதிரை விழா அமைந்துள்ளது.

பத்துநாட்கள் நடைபெறும் இவ்விழாவில், ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் மாணிக்கவாசகர், சுவாமி சன்னதிக்கு எழுந்தருள்வார். அப்போது திருவாசகம் பாடப்படும். குறிப்பாக திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுவர். அதன்பின் மாணிக்கவாசகருக்கும், சுவாமிக்கும் தீபாரதனை நடக்கும்.





# சிவபெருமானின் நடனங்களின் எண்ணிக்கை

நடனக்கலைக்கு நாயகனாக திகழ்பவர் சிவன். அதனால், அப்பெருமானை நடேசன் என்று போற்றுகிறோம். இவர் 108 நடனங்களை ஆடியிருக்கிறார். இதில் அவர் மட்டும் தனித்து ஆடியவை 48. தேவியோடு சேர்ந்து ஆடியவை 36. திருமாலுடன் ஆடியது 9. முருகப்பெருமானுடன் ஆடியது 3. தேவர்களுக்காக ஆடியது 12 ஆகும். சிதம்பரத்தில் இவர் ஆடும் ஆனந்த தாண்டவத்தை தரிசிப்பவர்கள் முக்திநிலையை அடைவர். இதனை 'பார்க்க முக்தி தரும் தில்லை' என்று கூறுவர்.

# மனித வாழ்க்கையை எளிதாக கூறும் அஷ்டாவக்கிர கீதை

ஜனக மகாராஜா ஒரு நாள் இரவு தூங்கிக் கொண்டிருந்தார்.

அவருக்கு அப்போது ஒரு கனவு வந்தது.

அதில் அவர் ஒரு பிச்சைகாரனாக மிகவும் சிரமப்படுவது போல் கனவு. கனவில் அவர் படாத பாடு பட்டு துன்பப்பட்டார்.

அப்போது அது கனவு போலவே அவருக்குத் தெரியவில்லை. நிஜம் போலவே இருந்தது.

திடுக்கிட்டு "நாராயணா" என்று அலறினார். கண் விழித்தார்.

கண்விழித்துப் பார்த்தால் எல்லாம் மாறியிருந்தது. சில வினாடி முன்பு பிச்சைக்காரராக இருந்தவர் இப்போது மன்னராக இருந்தார்.

இது தொடர்ந்து பல நாட்களாக நடந்து கொண்டே இருந்தது.

அவர் தினசரி இரவு தூங்கும் போது கனவில் பிச்சைக்காரனாகி படாத பாடுபடுவார்.

பகலில் எழுந்தால் மன்னனாக சகல சுக போகங்களுடன் இருப்பார்.

ஜனகருக்கு ஒரு பெரும் சந்தேகம் உதித்தது.

"நான் மன்னனாக இருந்து பிச்சைக்காரனாக இருப்பது போல் கனவு கண்டேனா?

அல்லது பிச்சைகாரனாக இருந்து இப்போது மன்னராக இருப்பது போல் கனவு காண்கிறேனா?" என சந்தேகம் வந்து விட்டது.

மந்திரி, ராஜகுரு எனப் பலரிடம் கேட்டுப் பார்த்தார். யாருக்கும் பதில் தெரியவில்லை.அந்த சந்தேகம் அவர் மனதை அரித்துக் கொண்டே இருந்தது.

"நான் பிச்சைக்காரனா, மன்னனா" என்று அவர் கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தார்.

பிறகு ஒரு அறிவிப்பை வெளியிட்டார். தமது சந்தேகத்தைத் தீர்த்து வைப்பவர்களுக்கு பெரும் பரிசை அளிப்பதாகச் சொன்னார்.

நாட்டிலிருந்த வித்வான்கள் எல்லாரும் வந்தனர். தூர தேசத்திலிருந்து பண்டிதர்கள், முனிவர்கள், வேத விற்பன்னர்கள் எல்லாரும் வந்தனர். யாராலும் பதில் சொல்ல முடியவில்லை.

வெளியூரிலிருந்து விதேக நாட்டுக்கு ஒரு முனிவர் வந்தார்

அவர் பெயர் அஷ்டாவக்கிர மகரிஷி. அவர் உடல் 8 கோணலாக வளைந்திருக்கும். அது ஏனென்றால் அவர் தம் அன்னையின் வயிற்றிலிருந்த போது, கத்துக்குட்டியான அவர் தகப்பனார் வேதத்தை தப்புத் தப்பாக படிப்பாராம்.

அப்போது வயிற்றிலிருந்த மகா ஞானியான குழந்தை அதைக் கேட்கச் சகிக்காமல் உடம்பை திருப்புமாம். அப்படி 8 தடவை திருப்பி உடல் அஷ்ட கோணலாக வளைந்து அஷ்டா வக்கிரன் என்ற பெயரும் ஏற்பட்டது.

ஜனகரின் கேள்வியை அறிந்த அஷ்டாவக்கிர மகரிஷி ஜனகரின் அவைக்குச் சென்றார். பண்டிதர்களின் பெருங்கூட்டம் அவையில் இருந்தது. யாருக்கும் பதில் தெரியவில்லை

"என் கேள்விக்கு பதில் சொல்ல ஆளே இல்லையா?" என ஜனகர் வேதனையுடன் கேட்டார்.

"நான் சொல்கிறேன்" என்றார் அஷ்டாவக்கிரர்.

அரசவை முழுக்க அவரைத் திரும்பிப் பார்த்தது.

அவரைப் பார்த்த மறுவினாடியே பண்டிதர்கள் சிரிக்கத் துவங்கி விட்டனர்.

குள்ளமாக, கறுப்பாக,

எண் கோணலாக வளைந்த உடலை வைத்துக் கொண்டு ஒருவர் சபைக்கு வந்தால் எப்படி



இருக்கும்? அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

சிரிப்பொலி அடங்கும் வரை அஷ்டாவக்கிரர் மவுனமாக நின்றார்.

"என் கேள்விக்கு பதில் தெரிந்தால் சொல்லுங்கள்" என்று ஜனகர் ஆவலுடன் கேட்டார்.

"சொல்கிறேன்.அதற்கு முன் சபையில் இருக்கும் தோல் வியாபாரிகளையும்,

கசாப்புக் கடைகாரர்களையும் வெளியே அனுப்புங்கள்" என்றார் அஷ்டா வக்கிரர்.

"என்ன சொல்கிறீர்கள்? இது பண்டிதர்களின் சபை. இங்கு எந்த கசாப்பு கடைக்காரனும் தோல் வியாபாரியும் இல்லை" என்றார் ஜனகர்.

"இங்கு பண்டிதன் என யாரும் இல்லை.

இங்கிருப்போர் அனைவரும் கசாப்புக் கடைக்காரர்களும் தோல் வியபாரிகளும் தான்" என்றார் அஷ்டாவக்கிரர்.

சபை முழுக்க கொதித்தெழுந்தது.

"என்ன திமிர் இந்த குரங்கனுக்கு?" என்று சப்தமிட்டார் ராஜகுரு.

"வேதம் கற்ற பண்டிதர்களை இழிவுபடுத்திய இவனை கழுவிலேற்றுங்கள்" என்று அனைவரும் கூச்சலிட்டனர்.

"ஏன் அப்படி சொன்னீர்கள்?" என்று பரிவுடன் கேட்டார் ஜனகர்.

"கற்றறிந்த பண்டிதர்களை கசாப்புக் கடைக்காரன் என்று சொல்லலாமா?" என்று கேட்டார்.

உரத்த குரலில் அஷ்டாவக்கிரர் பதில் சொன்னார்.

"ஓ மன்னா! உன் கேள்விக்கு பதில் நான் சொல்கிறேன் என்று சொன்னேன். சபை முழுக்க என்னைப் பார்த்துச் சிரித்தது.

ஏன் சிரித்தார்கள்?என் குறைவான ஞானத்தைக் கண்டு சிரித்தார்களா? நான் தவறாகச் சொன்ன விளக்கத்தைக் கண்டு சிரித்தார்களா? இல்லை.

இது எதைக் கண்டும் அவர்கள் சிரிக்கவில்லை. என் உருவத்தைப் பார்த்து சிரித்தார்கள். என் தோலின் நிறத்தை வைத்து,என் உடலின் உருவத்தை வைத்து இவர்கள் என்னை, என் அறிவை மதிப்பிட்டார்கள்.

என் தோலை வைத்து என் மதிப்பை

நிர்ணயிக்கும் இவர்கள் தோல் வியாபாரிகள் தானே?

தோல் வியாபாரி தான் தோலின் நிறத்தை வைத்து ஆட்டுத் தோலுக்கு விலை போடுவான். கசாப்புக் கடைக்காரன் தான் ஆட்டின் உரு வத்தை வைத்து ஆட்டுக்கு மதிப்பு போடுவான்.

இவர்களும் என்னை அப்படித் தான் மதிப்பிட்டார்கள். அதனால் தான் இவர்களை தோல் வியாபாரி என்றேன்.

பண்டிதர்கள் இருக்க வேண்டிய சபை யில் தோல் வியாபாரிகளுக்கு என்ன வேலை? அதனால் தான் இவர்களை வெளியே போகச் சொன்னேன்" என்றார் அஷ்டாவக்கிரர்.

அவமானமடைந்த பண்டிதர்கள் தலை குனிந்து சபையை விட்டு வெளியேறினார்கள்.

வந்தவர் மகா ஞானி என ஜனகரும் அறிந்தார். மகா பணிவுடன் அவர் காலடியில் அமர்ந்து தன் சந்தேகத்துக்கு விடை கேட்டுத் தெரிந்து கொண்டார்.

ஜனகருக்கு அஷ்டாவக்கிரர் சொன்ன அந்த உபதேசம் அஷ்டாவக்கிர கீதை என்ற பெயருடன் விளங்குகிறது.

அந்த உபதேசத்தை பெற்ற ஜனகர் அன்று முதல் மகா ஞானியாகி விட்டார். ஜனகரின் சந்தேகம் தீர்த்த மகரிஷியின் விளக்கம் என்ன?

தூங்கினப்போ கண்டதும் கனவு தான். இப்போ நீ வாழும் வாழ்வும் கனவுதான்.

உன்னோட ராஜ வாழ்வும், பிச்சைக்கார வாழ்வும் ரெண்டும் உண்மையில்லை.

ராஜாவா இருக்கறப்ப சந்தோஷப்படாதே.

தூங்கறப்ப அந்த சந்தோஷம் போயிடும்.

பிச்சைக்காரனா இருக்கறப்ப வருத்தப் படாதே.

முழிச்சா அந்த வருத்தம் மறைஞ்சுடும்.

ரெண்டு நிலையிலும் ஒரே மாதிரி இருக்கக் கத்துக்க என்றார்...

உலகினில் எதுவும் நிரந்தரம் இல்லை.





ஆன்மிகமலர் மெயில் புக்



மாதம் தோறும் இரண்டு இதழ்களாக
(இ-புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்
இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள்,
மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த
ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்
படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற
வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

## நல்ல, தீய, நண்பன்

# இறை நிலை அடைய நட்புகள் கூட உதவும்

எதைச் சார்ந்து நிற்கிறோமோ, அதன் வடிவத்தை அடைந்து விடுகிறோம். பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும் என்பார்கள்.

பழமொழி கேட்பதற்கு எப்படியோ இருக்கிறதா? நல்லது. ஆனால் உண்மைதான்.

யாரோடு, நீ பேசுகிறாயோ அவனுடைய நடத்தையைப் பொறுத்தே உன் புத்தி செயல்படுகிறது.

ஏன், வர்ணங்களிலேகூட ஒரு மனோதத்துவம் உண்டு.

கறுப்பு வர்ணத்தையே பார்த்துக் கொண்டிருப்பவனுக்குக் கல்மனம்; வெள்ளை நிறத்தைப் பார்த்தால் தூய்மை; பச்சை தயாள சிந்தை; மஞ்சள் மங்கலமுடையது.

வாசனையிலும் அந்தப் பேதம் உண்டு.

நறுமண மலர்களை முகரும் போது உன் மனமும், முகமும் பிரகாசிக்கின்றன.

நாற்றத்தை முகரும் போது உனக்கே அருவருப்பு.

அதுவே உனக்குப் பழக்கமாகி விட்டால், உன்னைப் பார்க்கும்போதெல்லாம் எதிரிகளுக்கு அருவருப்பு.

சகவாச தோஷமும் இதுதான்.

நான் பன்னிரண்டு வயதில் தமிழ் வித்துவான் பரீட்சை எழுதினேன். அப்போது அமராவதி புதூர் குருகுலத்தில் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அங்கேயே வித்துவான் பட்டப்படிப்புத் தொடங்கினார்கள். அப்போது வித்துவான் பட்டப்படிப்புக்கு இவ்வளவு ஆங்கிலப் படிப்பு வேண்டும் என்ற விதிமுறை இல்லை.

முதல் வருடம் என்ட்ரன்ஸ்' பாஸ் செய்தேன். அப்போது எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர் ராமநாதபுரம் வித்துவான் ராமசாமிப் பிள்ளை. அவரது எளிய தோற்றம் என்னைக் கவர்ந்தது.

அத்தோடு நான் கிராமத்துக்கு வந்துவிட்டேன்.

வித்துவான் படிப்பைத் தொடர வேண்டும் போல் தோன்றிற்று.

பக்கத்து ஊரான கீழ்ச்செவல்பட்டியில் இருந்த வித்துவான் முத்துகிருஷ்ண ஐயரிடம், தினமும் நான்கு மைல்கள் நடந்து போய்த் தமிழ் இலக்கியம் கற்றுக் கொண்டேன்.

அதையும் முழுமையாகக் கற்கவில்லை.

குருகுலத்திலும், பிறகு சென்னைக்கு வந்ததும், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர் களிடம் தான் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

குருகுலத்தில் நான் படித்த போது அவர்தான் தலைமை ஆசிரியர்.

அவர்களிடம் நான் பாடம் கற்றுக் கொண் டேன்; பழகியும் வந்தேன்.



அந்தப் பழக்கத்தில் தான், எனக்குப் பணிவு ஏற்பட்டது.

புதுக்கோட்டை, ராயவரத்தில் ஒரு பத்திரிகையில் நான் ஆசிரியராக இருந்த போது, சில நண்பர்களின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. அந்தத் தொடர்பில்தான் மதுப்பழக்கம் ஆரம்பமாயிற்று.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் திருமுருக கிருபானந்த வாரியாரின் தொடர்பு ஏற்பட்டது.

திடீரென்று அவர் எனக்கு ஒருநாள் டெலிபோன் செய்து, ஒரு திருக்குளத் திருப்பணிக்காக என்னைப் பார்க்க வருவதாகச் சொன்னார்.

நான் உடனே, சுவாமி நீங்கள் வரவேண்டாம்; நானே வருகிறேன்' என்று கூறி ஒரு நண்பரிடம் ரூபாய் ஐயாயிரம் கடன் வாங்கிக் கொண்டு, நேரே சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்றேன்.

அவர் காலைத் தொட்டு வணங்கி, அந்தப் பணத்தைக் கொடுத்தேன்.

பிறகு அவர் சொற்பொழிவுகளைக் கேட்க ஆரம்பித்தேன். அதிலிருந்து என் போக்கே மாறி விட்டது.

1949-இல் நாத்திக நண்பர்களின் சகவாசத் தால் நாத்திகனானவன், வாரியார் சுவாமிகளின் சகவாசத்தால் அர்த்தமுள்ள இந்துமதம்' எழுதத் தொடங்கினேன்.

பஜகோவிந்தத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் மிக அழகாகச் சொன்னார்:

இன்று எனக்கே நான் சிறந்தவனாகக் காட்சியளிக்கிறேன்.

ஸத்ஸங்கதேவே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சலத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்தி

நல்ல ஞானிகளுடைய தொடர்பு ஏற்பட்டால், சொந்தம் பந்தம், மயக்கம் விலகிவிடும்.

அது விலகினால், காசு பணத்தின் ஆசை விலகிவிடும்.

அந்த ஆசை விலகிவிட்டால், மனதுக்கு நிம்மதி வந்துவிடும்.

அந்த நிம்மதி வந்துவிட்டால், ஆத்மா சாந்தியடையும்.

நல்ல சகவாசத்தில் எவ்வளவு பெரிய வாழ்க்கை அடங்கிக் கிடக்கிறது!

காஞ்சிப் பெரியவர்களைப் பார்க்கும் போதெல்லாம், நாமும் அவரது மடத்தில் ஊழியம் பார்க்கக் கூடாதா?' என்று எனக்குத் தோன்றுகிறது.

கட்டுப்பாடற்ற வாழ்க்கை நடத்தும் நண்பர்களோடு சேர்ந்து விட்டாலோ, இதல்லவோ வாழ்க்கை' என்று தோன்றுகிறது.

எதைச் சார்ந்து நிற்கிறோமோ, அதன் வடிவத்தை அடைந்து விடுகிறோம்.

அதனால்தான் நான் இப்போதெல்லாம் வேடிக்கை விளையாட்டுக் கூட்டத்தில் இருந்து விலகியே நிற்கிறேன்.

சார்ந்தால் மேதைகளைச் சாருகிறேன்; இல்லையேல் தனிமையை விரும்புகிறேன்.

லண்டனில் இருக்கும் வரை கீழ்த்தரமானவன் என்று பெயர் வாங்கிய கிளைவ், இந்திய மண்ணுக்கு வந்ததும் வீரனாகி விட்டான்.

கணிகையாகத் தொழில் நடத்திய ஒருத்தி, புத்தபிரானைச் சந்தித்ததும் ஞான தீட்சை பெற்று விட்டாள்.

திருமாலை வணங்கிய சேர மன்னன், முடி துறந்து குலசேகர ஆழ்வாரானான்.

கண்ணனை நம்பிய குசேலன் குபேரனானான்.

துரியோதனன் சோற்றைத் தின்று விட்டதால் தான், சூரகர்ணன் அநியாயத்திற்கே துணை போக வேண்டி வந்தது.

சகுனியைச் சார்ந்த கௌரவர்கள் அழிந்தார்கள்; கண்ணனைச் சார்ந்த பாண்டவர்கள் வாழ்ந்தார்கள்.

அண்ணனைத் துறந்து ராமனைச் சார்ந்த விபீஷணன் அரசுரிமை பெற்றான்.

இராவணனை அண்டி நின்றார், அவனது முடிவையே பெற்றார்கள்.

ராமனைச் சார்ந்து நின்றதால், ஒரு குரங்குக்குக் கூட நாட்டிலே கோயில் தோன்றிற்று.

சிறிய இனங்களைக் கண்டு அஞ்சுங்கள்; சேராதீர்கள்' என்றான் வள்ளுவன்.

செம்மண்ணில் மழை விழுந்தால், தண்ணீரின் நிறம் சிவப்பு; கரிசல் காட்டில் விழுந்தால் கருப்பு.

மனிதனின் சேர்க்கையைப் பொறுத்தே மதிப்பு இதுவும் வள்ளுவன் சொன்னதே.

உன் மனதைப் பொறுத்து உனக்கு உணர்ச்சிகள் எழலாம்; நீ சேரும் இனத்தைப் பொறுத்தே உன் யோக்கியதை தீர்மானிக்கப்படும்' என்பது வள்ளுவன் சொல்லே.

நல்ல கூட்டத்தில் சேர்ந்தால், எல்லாப் பொருள்களும் கிடைக்கும்.

திருடர்களுடனே சேர்ந்தால், நீ சிறைச் சாலைக்குத் தப்ப முடியாது திருடாவிட்டாலும் கூட.

நல்லோர் உறவைப் போல் துணையும் இல்லை; தீயோர் உறவைப் போல துன்பமும் இல்லை.

இவன் நல்லவன், இவன் கெட்டவன் என்று எப்படித் தெரிந்து கொள்வது?

அவனோடு ஒட்டாமலேயே பல நாட்கள் ஆராய்வது, ஆராய்ந்து தெளிந்த பின் உறவு கொள்வது.

ஆராயாமல் ஒருவனை நல்லவன் என்று முடிவு கட்டுவதும் தப்பு, நல்லவன் என்று தெரிந்த பிற்பாடு அவன் மீது சந்தேகப்படுவதும் துன்பம்' என்றான் வள்ளுவன்.

மனைவியைத் தேர்ந்தெடுக்கும் போது இருக்கும் புத்தி, மற்ற சகவாசங்களைத் தேர்ந் தெடுக்கும் போதும் இருக்க வேண்டும்.

தீ சுடும்; தண்ணீர் குளிரும்.

குளிர்ச்சியான உறவுகளே, குதூகலமான உறவுகள்.

நம்பிப் பணத்தைக் கொடுத்தால் ஏமாற்று கின்றவன், நம்பி வீட்டுக்குள் விட்டால் நடத்தை தவறுகிறவன், நம்பித் தொழிற் பங்காளியாக்கினால் மோசம் செய்கிறவன், நம்பிப் பின் பற்றினால் நட்டாற்றில் விடுகிற தலைவன் இவர்களால்தான் பெரும் நஷ்டங்களும், துன்பங்களும் வருகின்றன.

ஆகவே, இளம்பருவத்தில் இருந்தே ஆட்களை அடையாளம் கண்டு பழகத் துவங்கினால், பல வகையான துன்பங்கள் அடிபட்டுப் போகும்.

அது மட்டுமல்ல, நீ நஷ்டப்படும் போது மளமளவென்று உதவிகளும் கிடைக்கும்.

சாதாரணமாக வழித்துணைக்குக் கூட ஒரு அயோக்கியனை நம்பக்கூடாது; ஆனால் மரண தருவாயில்கூட ஒரு உத்தமனை அவன் பரம ஏழையாக இருந்தாலும் நம்பலாம். தான்கூடச் சாப்பிடாமல், உனக்குப் பரிமாறும் ஏழைகளும் உண்டு.

உன் மேலாடையைத் திருடி வைத்துக் கொள்ளும் பணக்காரர்களும் உண்டு.

இனமும் குணமும் தான் முக்கியமே தவிரப் பணம் அல்ல. முதலாளி நொடித்துப் போனபோது, அவரைத் தன் வீட்டிலேயே வைத்துச் சோறு போட்ட வேலைக்காரனைக் கண்டிருக்கிறேன்.

அவராலே பணக்காரரானவர்கள் எல்லாம், அவரைக் கைவிட்டதையும் பார்த்திருக்கிறேன்.

இனம்' என்பது ஜாதியைக் குறிப்பதல்ல; குணத்தைக் குறிப்பது. `சிற்றினம்' என்பது குணத்தால் கீழ் மக்களைக் குறிப்பது.

அவர்களிடமிருந்து அறவே விலகி, ஒவ்வொரு துறையிலும் உத்தமர்களையே சார்ந்து நின்று பாருங்கள்; பெருமளவு துன்பத்திலிருந்து விடுபடுவீர்கள்.

– கவிஞர் கண்ணதாசன்.







# சிவன் சொத்து குலநாசம்

## அதற்காக விளக்கம்!!

இந்து சமயத்தில் பெருமாள், சிவன், என இரு பெரும்தெய்வங்கள் உண்டு. இதில் பெருமாள் பார்ப்பதற்கு பொன்பொருள் ஆடை ஆபரணங்கள், நைவேத்தியங்கள் என கண்களை கவரும் வகையில் இருப்பார். ஆனால் ஈசன் ஜடாமுடியுடன் இடுப்பில் புலித்தோல் தறித்து. உடலில்சுடுகாட்டுச்சாம்பல் பூசிக்கொண்டு கையில் திருவோடு ஏந்தி பார்ப்பதற்கு பரதேசி கோலத்தில் இருப்பார்.

பெருமாளிடம் உலகியலுக்கு தேவையான அனைத்தும் இருப்பதால் அவர்மீது பக்திகொண்டு மக்கள் வழிபட்டு அவரிடம்கோரிக்கை வைப்பது இயல்பான விசயம்.

ஆனால் ஈசன் அப்படி அல்ல. அவர்மீது பக்தியை காட்டிலும் பயம் வருவது தான் நிதர்சனம்.அவரு டைய அலங்காரம் அப்படி. பெருமாளை யார் வேண்டுமானாலும் வணங்கலாம். ஆனால் ஈசனை வணங்க ஈசனே தேர்தெடுத்தால் மட்டுமே அவர்மீதுபக்திகொள்ள முடியும்.

பெருமாளை வணங்குவது தகப்பனின் கையை மகன் பிடித்துச் செல்வது போலாகும்.

தகப்பனின் கையை பிடித்துச்செல்லும் குழந்தை வழியில் ஏதாவது பள்ளம் வந்தால் கிழே விழுவதற்கு வாய்ப்பு அதிகம்.

**ஈசனை வணங்குவது தகப்பன் குழந்தையின் கையை பிடிப்பது போலாகும்.**

தகப்பனால் கரம்பற்றி அழைத் துச்செல்லப்படும் குழந்தை கீழேவிழு வதற்கோ வழிதவறவோ வாய்ப்பே இல்லை.

சிவன் சொத்து எனப்படுவது திருநீரும் ருத்ராட்சமுமே.

இதை அணிந்தால் அவரது குலம் நாசமாகும், அதாவது அவரது பாவங்கள் அனைத்தும் நாசமாகும்.

அவரது மறுபிறப்பும் நாசமாகும்.

அவரால் அவரது வம்சமே பிறவிக்கடலில் இருந்து மீண்டு . பிறவாநிலையை அடைவர்.இதுவே சிவன் சொத்து குலநாசம் என்பதன் இரகசியம்.



# சாஸ்திரப்படி சிவயோகிகள் உடலுக்கு செய்யப்பட வேண்டிய கடமைகள்

மனிதர்களுக்கு பிறப்பு ஏற்படும் போதே இறப்பு கட்டாயம் என்பது எழுதப்படாத விதியாக வகுக்கப்பட்டுள்ளது, மனித நிலையிலிருந்து இறைநிலையை அடையும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பக்தி நிலையை கடந்தால்தான் சித்தர், முனிவர், மகான், குருமார் போன்ற நிலையை அடைய முடியும்.

**சித்தர்கள்** என்பது சித்தி அடைந்தவர்களை குறிக்கிறது

**முனிவர்கள்** என்பது சித்தி நிலையை அடைய முயல்பவர்களை குறிக்கிறது

**மகான்கள்** என்பது மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்ந்தவர்களை குறிக்கிறது

**குருமார்கள்** என்பவர்கள் தான் பெற்ற ஆன்மீக ஒளியை கொண்டு மற்றவர்களின் வாழ்க்கை இருளை போக்குபவர் அதன் மூலம் இறை நிலையை அடைபவர்களை குறிக்கிறது

இவ்வாறன நிலையை அடைந்தவர்கள், தங்கள் உடலை விட்டு விட்டு, உயிர் இறை நிலையை அடையும்போது அவ்வுடலுக்கு சிலவகையான சிறப்புகள் இந்து மதத்தில் செய்யப்படுகிறது.

இதுபோன்ற சிவயோகிகள் பரிபூரணம் ஆகும்பொழுது கடைபிடிக்கபடும் வழிமுறைகளை தருமையாதீன வெளியீடான **"வர்ணாசிரம சந்திரிகா"** என்னும் நூல் வெளியிட்டுள்ளது, அதைப்பற்றி விரிவாக நாம் காண்போம்.

முதலில் இதுபோன்ற சிவயோகிகள், படிப்படியான தீட்சை பெற்ற சிவனடியார்கள் பரிபூரணம் அடைவதை, சாதாரண தீட்சை இல்லாத மனிதர்களின் மரணத்தை குறிக்கும் சொற்களாகிய மரணம், காலம் போன்றவற்றால் குறிப்பது பாவச்செயலாகும்!

சிவதீக்சை பெற்றவர்கள் ஒருபோதும் மரணிப்பது இல்லை, அவர்கள் ஆன்மாவின் அடுத்த நிலைக்கு செல்வதால் **"தேகவியோகம்"** அடைந்தார்கள் அல்லது பரிபூர்ணம் ஆனார்கள் என்று குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு ஒரு சிவயோகி தம்முடைய தேகத்தை விட்டு பிரிந்தால், அந்த தேகத்தை தக்க முறையில் சமாதியில் வைத்து பூசித்து வருவது பிரதான சீடரின் கடமையாகும்.

இவ்வாறு தேகவியோகம் செய்த யோகியின் சிவசரீரத்திற்கு செய்யப்படும் பூசைகள் சடங்குகள் முதலியவற்றில் பங்கேற்கும் எவருக்கும் ஆசௌசம் (தீட்டு) ஏற்படாது, நிறைவாக குளிக்க தேவையில்லை (ஸ்நானமின்மை) என்று சுப்ரபேத ஆகமத்தில் இறைவன் கூறுவதாக இந்நூல் குறிப்பிடுகிறது. சிவசரீர பூசைகளில் கலந்து கொள்ளும் யாவருக்கும் ஐஸ்வர்யமும், சகல சம்பத்தும் கிடைக்கும் என்று அநேக ஆகமங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



அசிந்த்யவிஸ்வம் என்ற சாத்திர நூல், தபஸ்விகள் யோகாக்னியை தங்கள் உதரத்தில் ஏற்றி கொண்டவர்கள் ஆதலால், அவர்களது தேகத்தை சாதாரண நெருப்பில் சம்ஸ்காரம் செய்தல் கூடாது, உப்பினால் மூடி லிங்கஸ்தாபனம் செய்து பூசிக்க வேண்டும் என்று இறைவன் கூறுவதை எடுத்து கூறுகிறது.

தேகவியோகம் செய்த யோகியின்,சிவசரீரத்தினை, வாழைத்தோரணம், கமுகங்கூந்தல், மலர்கள் முதலியவையால் அலங்கரித்த பல்லாக்கு அல்லது இரதத்தில் ஏற்றி மங்களகரமான வாத்யங்கள் ஒலிக்க, திருமுறை முதலிய புண்ணிய பாமாலைகள் பாடியபடி சிவனடியார்கள் உடன்வர, நவரத்தினங்கள் கந்த மலர்கள் பொரி முதலியவற்றை வாரியிறைத்து கொண்டு சகல ஆரவாரத்துடன் சமாதீ சேத்திரத்தை அடைய வேண்டும் என்று சுப்ரபேதம், பௌஷ்கரம் முதலிய ஆகமங்களில் இறைவன் எடுத்துரைக்கிறார்.

சிவசரீரத்தினை சமாதி வைக்கும் இடமானது, அவருடைய இருப்பிடமாகவோ, ஆலயத்திலோ, பூந்தோட்டம், ஆற்றங்கரை, தாமரைக்குளத்தின் கரை, பசுக்கொட்டில், வில்வமரத்தின் சமீபம் அல்லது அடி முதலிய பரிசுத்தமான இடங்களில் ஒன்றாக இருக்க வேண்டும்.

சமாதி பூமியை வடக்கு முகமாக நீரால் தெளித்து, ஒவ்வொரு பக்கமும் மூன்று முழ அகலமும் ஆறடி நீளப் பள்ளமும் உடையதாக குழியை வெட்டி, அதனை பாலால் நனைக்க வேண்டும், பின்னர் அதில் 12 பாரம் காவிக்கல் பொடியும் 6 பாரம் திருநீற்றுடன் கூடிய மஞ்சள் பொடியும் பத்துபாரம் உப்பையும் பரப்பி அதன்மிது நவரத்தினங்கள் முதலிய புண்ணிய பொருட்களை வைத்து மத்தியில் சிவசரீரத்தினை கமலாஸனத்தில் ஸ்தாபித்து, சிவசரீரம் மூழ்கும் வரை உப்பும் மஞ்சள் பொடியும் கலந்து மூடி பின்னர் மண்ணால் குழியை பூர்ணம் செய்து, குழி பூமிக்கு சமமாக இருக்கையில் மேகலை என்ற அழகிய பீடம் அமைத்து அதன் மீது சரீரத்தின் சிரபாகத்தில் மண்ணினால் ஆன இலிங்கத்தினை வைத்து சகல விதமான தூபதீப நெய்வேத்யங்களுடன் கர்மசிரத்தையாக பூசிக்க வேண்டும்

இவ்வாறாக மண்மயமான இலிங்கத்தை பிரதான சிஷ்யர் மிக சிரத்தையாக குறிப்பிட்ட நாட்கள் அல்லது ஆறுமாதம் பூசித்திருந்த பிறகு, ஆகமங்களில் கூறப்பட்ட பல்வேறு லிங்க வகைகளில் உத்தமமான சிவாதிக்ய லிங்கத்தினை, கல்லில் செய்து ஸ்தாபித்து அதன்மீது விதானங்கள், உப்பரிகைகள் மண்டபங்கள் சுதைவேலைகள் முதலியவற்றுடன் கூடிய விமானத்துடன் கோயில் அமைத்து உத்தமமான யாகசாலையில் கடஸ்தாபனம் செய்து கும்பாபிசேகம் செய்ய வேண்டும்

பின்னர் திதி வாரம் வருடம் முதலிய நாட்களில் விசேச பூசைகளும் திருவிழாக்களும் செய்ய வேண்டும், இந்நிகழ்வுகளில் பங்குபெறும் யாவருக்கும் சகல சம்பத்தும் கிடைக்கும்.

இதுபோன்ற இறையருள் பெற்றவர்களின் திருஉடல்களுக்கு சரியான வழிமுறை கடைபிடிக்காமல் விடப்பட்டால் மிகப்பெரிய தோஷ, பாபங்கள் விளைவிக்கும்.

அதில் குறிப்பாக நாட்டை ஆளும் ராஜாவிற்கும் கால்நடைகளுக்கும் தோஷம் ஏற்படும் என்றும் காமிகம், சுப்ரபேதம், பௌஷ்கரம் முதலிய ஆகமங்களில் இறைவன் கூறுவதாக வர்ணாசிரம சந்திரிகை நூலில் தருமையாதீன ஏழாவது தேசிக மூர்த்திகள் தொகுத்து கூறியுள்ளார்.


ஆன்மிகமலர் மெயில் புக்

# ஹரிவராசனம் பாடலின் வரலாறு

கார்த்திகை பிறந்தாலே சபரிமலை ஐயப்பன்தான் நினைவுக்கு வருவார், அதுபோல ஐயப்பன் என்றாலே ஹரிவராசனம் பாடல்தான் நம் மனம் பாடத் துவங்கும்.

சபரிமலையில் ஐயப்ப சாமியை உறங்க வைக்கும் **ஹரிவராசனம் விஸ்வமோகனம்...** எனும் உறக்கப்பாட்டு அத்தாழப்பூஜை முடிந்த பின் நடைசாத்தும் பாடலாக ஒலிக்கும். இந்த ஹரிவராசனம் பாடலை தாலாட்டாக பாடுவதாகவும், இதனால் ஐயப்பன் நிம்மதியாக துயில் கொள்வதாகவும் ஐதீகம்.

இவ்வளவு சிறப்பு பெற்ற அந்த ஹரிவராசனம் பாடல் உருவான கதையைப் பற்றி பார்ப்போம்.

இந்த பாடலை இயற்றியவர் தமிழகத்தை சார்ந்த கம்பங்குடி ஸ்ரீ குளத்து ஐயர், இவர் 1920 ஆம் வருடம் இந்த பாடலை இயற்றினார்.

இவர் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைகுறிச்சி எனும் ஊரில் பிறந்தவர் ஆவார். கம்பங்குடி சுந்தரம் குளத்து அய்யர் பிரசுரித்த சாஸ்தா ஸ்துதி கதம்பம் என்ற புத்தகத்தில் உள்ளது இந்த ஹரிவராசனம் கீர்த்தனம்.

இவர் ஹரிவராசனம் பாடலை ஐயப்பசாமியை தரிசிக்கும்போது எழுதினார்.. ஒவ்வொரு வரிகளும் அய்யப்ப சாமியே அருளியதுபோல இருந்ததாக அவர் கூறியுள்ளார்.

கம்பங்குடி என்பது இவரது வம்சாவழி பட்டப்பெயராகும், இவரது முன்னோர்கள் மிகவும் கஷ்டபட்டாலும் இவர்களது வீட்டின் வழியாக போவோர் வருவோர்க்கும் இல்லாதவர்களுக்கு உணவளித்து வரும் பழக்கத்தை கடைபிடித்து வந்தனர்.





அந்த குடும்பத்தைபற்றி சோதிப்பதற்காக ஐயப்பன் இவர்களிடம் உணவு கேட்டுள்ளார்.

உனவு ஏதும் இல்லாததால் வீட்டில் இருந்த கம்பு தானியத்தை கூழாக செய்து உணவளித்தனர். அதனாலதான் அவர் களது குடும்பம் கம்பங்குடி என்ற பட்டப்பெயர் அமைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பூர்விகமான குடும்பத்தில் பிறந்தவர் தான் ஹரிவராசனம் பாடலை இயற்றிய கம்பங்குடி ஐயர்

இந்தப் பாடல் வழக்கத்திற்கு வருவதற்கு முன், சபரிமலையில் மேல் சாந்தியாக இருந்த செங்ஙன்னூர் கிட்டுமணி திருமேனி (நம்பூதிரி) புல்லாங்குழல் வாசித்து நடை சார்த்துவது நடப்பில் இருந்தது.

1950–களில் சபரிமலை ஐயப்பன் கோவில் தீக்கு இரையாகி (ஒருசில சுயநலவாதிகளின் இந்து மத வெறுப்பின் காரணமாக ஏற்பட்ட தீ) பின் தேவபிரசன்னம் பார்க்கப்பட்டு சபரிமலை கோவிலை மீண்டும் 1951 புணரமைத்தனர்.

அப்போது கோவில் மேல்சாந்தியாக இருந்த ஈஸ்வரன் நம்பூதிரி ஹரிவரசனம் கீர்த்தனம் இரவு அத்தாழப்பூஜையில் அய்யப்பசாமி முன் நின்று ஸ்லோகம் போன்று சொல்வதை மாற்றினார். இது அய்யப்ப சாமியை உறங்கவைக்கும் பாடல்போல உள்ளதாக கருதி

அத்தாழபூஜை இரவு பூஜை முடிந்து நடை சாத்தும் பாடலாக மற்றினார்.

மேல்சாந்தியாக இருந்த ஈஸ்வரன் நம்பூதிரி, கோவில் ஊழியர்களும் ஹரிவராஸனம் பாட ஆரம்பித்த வழக்கம், ஏசுதாஸின் இனிய குரலில் இந்தப் பாடல் வெளிவந்த பிறகு அந்த இசைத்தட்டை இசைப்பதாக மாறியது. அப்புறம் ஒலிப்பேழை. இந்தப் பாடலை மூன்று விதமான இசையமைப்பில் பாட அறிந்தவன் நான்.”

கே ஜே யேசுதாஸ் 1975 ஆம் ஆண்டு தமிழ் மலையாளம் மொழிகளில் வெளிவந்த சுவாமி அய்யப்பன்"திரைப்படத்தில் முதன் முறையாக இந்தபாடலை பாடினார் அதற்கு தேவராஜன் என்பவர் இசையமைத்தார்.. அந்த மெட்டில் அமைந்த ஹரிவரசனம் பாடல்தான் இன்று வரை சுமார் 35 வருடங்களாகசபரிமலையில் நடைசாத்தும் பாடலாக ஒலிக்கிறது.

## ஆன்மிக மலர்கள்

தலைமுடிக்கு மந்திரங்களை எளிதில் கிரகிக்கும் தன்மை உண்டு. தலைமுடியைக் கொண்டு பில்லி சூனிய ஏவல் வைக்கவும் செய்வர். எனவே தலைமுடியையும் நகத்தையும் எக்காரணம் கொண்டும் பிறர் பார்க்கும் படி வெளியில் எறியலாகாது.

❖❖❖

செவ்வாய், வெள்ளி ஆகிய இருநாட்களிலும் தலைமுடி வெட்டுதல் நகம் வெட்டுதல் சவரம் செய்து கொள்ளுதல் கூடாது.

❖❖❖

அன்னத்தால் பிராணனையும் பிராணனால் பலத்தையும் பலத்தால் தவத்தையும் தவத்தால் சிரத்தையையும் சிரத்தையால் புத்தியையும் மனத்தால் சாந்தியால் சித்தத்தையும் சித்தத்தால் நினைவால் ஸ்திதப் பிரக்ஞையால் விஞ்ஞானத்தையும் விஞ்ஞானத்தால் ஆத்மாவையும் பெறுவதால் அன்னத்தைக் கொடுப்பது இவை எல்லாவற்றையும் கொடுத்தாகிறது. ஏன தைத்ரீயோபநிஷத் கூறுகிறது. எனவே முடிந்த போது முடிந்த அளவிற்கு அன்னதானம் செய்யுங்கள்.

❖❖❖

பித்ருக்களின் திதியன்று வீட்டில் அன்னதானம் செய்ய முடியாவிட்டால் ஓட்டல் போன்றவற்றில் உணவை வாங்கி கொடுக்கலாம், பணமாக கொடுத்தால் எந்தவிதப் பலனும் ஏற்படாது.

# ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பது ஐந்து பெண் மக்களைப் பெறுவதைக் குறிக்கவில்லையாம்..!

கீழ்கண்ட விபரப்படிக்கான ஐந்து பேரைக் கொண் டிருப்பவன், அரசனே ஆனாலும் கூட அவனது வாழ்க்கை வே அழிவை நோக்கி போகு என்பதுதான் உண்மையான அர்த்தம்

1. ஆடம்பரமாய் வாழும் தாய்,
2. பொறுப்பில்லாமல் வாழும் தந்தை,
3. ஒழுக்கமற்ற மனைவி,
4. ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறந்தோர்
5. சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள் என்பதாகும்..



# தெய்வத்தின் மீது சுமத்தப்படும் குற்றம்

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளை யெல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ, அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக் கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கி றார்கள். விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். எனவே, அதன் பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒருவருமில்லை; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை. நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தத் துன்பம், என்னுடைய சொந்தச் செயல்களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு நிலையே, என் ஒருவனால் மட்டுமே அது நீக்கப்பட வேண்டும்.

–சுவாமி விவேகானந்தர்

# செங்கல் மகிமை

குழந்தைகள் அடிகடி கீழே விழுந்துக் கொண்டே இருந் தால், செங்கலால் திருஷ்டி சுற்றி, பிறகு அந்த திருஷ்டி கழித்த செங்கல்லை போட்டு உடைத்து அந்த மண்ணை பூமிதாயை மனதில் நினைத்து கொண்டு, செங்கல் மண்ணை குழந்தையின் நெற்றியில் வைத்தால் அந்த குந்தைகளுக்கு திருஷ்டியால் உண்டாகும் பாதிப்பு குறையும்.

# சூரிய வம்சம்

அயோத்தியை ஆண்ட வம்சம் சூரியவம்சம். நீதி நேர்மை தவறாமல் ஆட்சிபுரியும் நல்லமன்னர்கள் பிறந்த குலம் இது.

எவ்வளவு துன்பம் நேர்ந்தபோதும், உண்மையிலிருந்து விலகாமல் சத்தியம் பேசிய அரிச்சந்திரன், சனிதோஷம் போக்கும் நளச்சக்கரவர்த்தி, பசுக்களுக்கு வாழ்வு தந்த திலீபச்சக்கரவர்த்தி, தசாவதாரங்களில் ஒருவராக வணங்கப்படும் ராமபிரான் ஆகியோர் சூரியகுலத்தில் தோன்றியவர்கள்.

கொடை வள்ளல் கர்ணனும் சூரியனின் பிள்ளையே. சூரியனை வழிபட்டவர்கள் சூரியகுலத் தோன்றல்களான இந்த மன்னர்களின் நல்லாசியையும் பெறுவர் என்பது உறுதி.

www.aanmeegamalar.com

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# உலகத்தின் முடிவு

72
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

1940 மே மாதம் 26ம் தேதி அன்று குருதேவர் கலிஃபோர்னியாவிலுள்ள என்ஸினிடஸ்ல் ஆற்றிய சொற்பொழிவு இச்சொற்பொழிவு இரண்டாவது உலகப் போரின்போது ஆற்றப்பட்டது.

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸயோகானந்தர் அருளுகிறார்: "தற்போதைய உலக நடப்புகளை எண்ணிப்பார்க்கும்பொழுது, நான் ஏன் எனது தலைப்புப்பொருளை, "உலகத்தின் முடிவு" என எடுத்திருக்கிறேன் என்பதை நீங்கள் நன்றாகப் பாராட்ட முடியும். எனது இன்றைய சொற்பொழிவு இன்னும் வர இருக்கின்ற பல விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உங்களுக்கு உதவும்".

"நடப்பு நிகழ்வுகளை அல்லது கடந்து விட்டவற்றை நாம் ஆராயும்பொழுது, இந்த சம்பவங்களைப்பற்றிய நமதுகருத்தானது, நம் உணர்வு நிலையில் இவை எவ்வளவு தெளிவாக அல்லது திரிக்கப்பட்டதாக பிரதிபலிக்கப்படுகிறது என்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. மக்கள், நிகழ்பவற்றை அவர்கள் வாழும் விதத்திற்கேற்பவும், அவர்களுடைய சொந்த மனம் மற்றும் அறிவுத்திறனின் அளவின் மூலமும் மதிப்பிடுகிறார்கள்.சுயநலம், தப்பெண்ணங்கள், வெறுப்பு, கோபம் ஆகியவை நிகழ்ச்சிகள் மற்றும் வாழ்க்கைப் புதிர்களைப் பற்றிய உண்மையான புரிதலைத் தடுக்கின்றன.

இறைவனுடன்தொடர்பு கொள்வதன்மூலமாக மட்டுமே எல்லாயிடத்திலும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அவனுடைய தெய்வீக விதிமுறைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியும். இறைவனுடைய படைப்பில் மனிதன், இரக்கமற்ற, புனிதத்தைக் கெடுக்கின்ற எல்லா வழிகளிலும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறான்.

இருந் தாலும் தீமை தன்னையே அழித்துக் கொள்வதையும், இறைசக்தி ஒவ்வோர் எதிர்ப்பின்போதும் முன்னேறிச் செல் வதையும் நாம் காண்போம்".

மேலும் அவர் தொடர்கிறார்: " நான் உங்களுக்குக் காண்பிக்கப்போவதைப் போன்று, உலகத்தின் முடிவு பல்வேறு உள்ளர்த்தங்களைக் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் முதலாவதாக நேரடியான பொருள் உண்டு. இந்தக்கருத்தில், உலகத்தின் முடிவு இரு வகைப்படும். பகுதி அளவான பிரளயம் மற்றும் முழுமையான பிரளயம்.

பன்னெடுங்காலத்திற்கு முன்னரே நாம் முழு பிரளயத்தை எதிர்பார்க்க முடியும். இருப்பினும் அவ்வப்பொழுது கொள்கை வெறிகொண்ட சில குழுக்கள் உலகம் முடிவிற்கு வந்துகொண்டிருக்கிறது என முன்னறிவிப்பு செய்கின்றன.

ஒரு சில வருடங்களுக்கு முன் னர் நியூயார்க்கில் இருந்த ஒரு பிரிவைப் பற்றி செய்தித்தாட்களில் நாம் படித் தோம்.

மனத்திகிலினாலோ அல்லது கற்பனையினாலோ தவறாக வழிகாட்டப்பட்ட அப்பிரிவின் தலைவர் தன்னைப் பின்பற்றுபவர்களின் மனதில் பயத்தைப்பதியச் செய்வதன்மூலம் அவர்களை பிடித்து வைத்துக் கொள்ள முயலுவோர் உண்மையான ஆசிரியர்கள் அல்ல. நாம் எப்பொழுதும் விவேகத்தால் வழிநடத்தப்படவேண்டும். ஒருபோதும் பயத்தால் அல்ல."

குருதேவர் மேலும் கூறுகிறார்: "என்னுடைய கதைக்குத் திரும்புவோம்:இந்தப் பிரிவின் அங்கத்தினர்கள் வரப்போ கின்ற பேரழிவிற்கு தயாராகினர்.

அவர்கள் தங்களுடைய சொத்தைக் கொடுத்துவிட்டு, உலகத்தின் முடிவிற்குக் காத்திருப்பதற்காக தங்களுடையஆசிரியருடன் ஒரு மலை உச்சிக்குச் சென்றுவிட்டனர்.

அவர்கள் காத்திருந்தனர். மேலும் காத்திருந்தனர். பல நாட்கள் கழிந்தன. அவர்களுடைய பசியின் வேதனைகள் அதிகரித்தவண்ணம் இருந்தன. இருப்பினும் எதுவும் நிகழவில்லை.

முடிவாக அவர்கள் நம்பிக்கை இழந்தனர். இறுதியில் அவர்கள்தங்களுடைய சொத்தைத் திரும்பப்பெறுவதற் காக சட்டரீதியான வழக்கு தொடரவேண்டியிருந்தது.

மீண்டும் தொடர்கிறார்: "போர் அல்லது மற்ற பேரழிவைப் பற்றிய முன்னறிவிப்புகளின் மூலம் மக்கள் எச்சரிக்கப்பட்டு வருவதற்கு இது ஓர் உதாரணம்தான். பெரும்பாலும் இவை பொய்யான முன்னறிவிப்புகள் என்பதை நிரூபித்தன. எது எவ்வாறாயினும், நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. என்ன இருந்தாலும் வாழ்க்கை என்பது என்ன? அது ஒரு தாற்காலிகக் கனவு. மரணம் என்பது ஓர் உறக்கம். மேலும் மற்றொரு கனவு என்பதைவிட வேறொன்றுமில்லை. கனவு முடிந்த உடன், அது மறைந்து விடுகிறது. அந்த உணர்வு நிலையிலிருந்து




ஆன்மிகமலர் மெயில் புக்

உங்கள்முன் விடுவிக்கப்படுவதை நீங்கள் காண இயலும்.”

நோயாலும் பஞ்ச பூதங்களாலும் ஏற்படு கின்ற அழிவிற்கு மனிதனே காரணம்.அவன் செய்யும் தீமை அவனுக்கே அழிவை ஏற்படுத்துகிறது.

குருதேவர் கூறுகின்ற ஒரு முக்கியமானகருத்து என்னவென்றால், “மனிதர்களின் மனம் சுயநலம், தப்பெண்ணங்கள், வெறுப்பு, கோபம் ஆகியவை வாழ்க்கைப் புதிர்களைப் பற்றிய உண்மையான புரிதலைத் தருக்கின்றன. இறைவனுடன் தொடர்பு கொள்வதன் மூலமாக மட்டுமே எல்லா யிடத்திலும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அவனுடைய தெய்வீக விதிமுறைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியும்,” என்கிறார்.

ஒவ்வொருவரும் இறைவனை அறிந்துணர்ந் தால் மட்டுமே மனிதர்களின் மனம் வளர்ச்சி அடையும். வளர்ச்சி அடைவதற்கு தியானம் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் தீமை செய்வதற்கு மனம் வழிகோலாது. அதுமட்டுமின்றி மனிதவாழ்க்கை மேம்படுவதற்கும் இது ஒரு முக்கியமான வழியாகிறது. மனம் பண்பட்டால் வாழ்க்கையும் பண்புடையதாக மாறும். அப் பொழுது நோய், துன்பங்கள், மரணபயம் ஆகிய வை இல்லாமல் போய்விடும். இவ்வளவும் கிடைக்கப்பெற வேண்டுமானால் தியானம் ஒன்றினால்தான் முடியும். அது உறுதி.அதற்கான ஒரு கதையும் உள்ளது. அது ஒரு நல்ல கருத்தான கதையாகும். நான் அதை எனக்குத் தெரிந்தவரை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

தேவர்களின் தலைவனானதேவேந்திரன் ஒரு தவறிழைத்தான். தவறு என்னவென்றால்,தேவ லோக சபையில் நடனம் புரியும் ஊர்வசி,மேனகை, ரம்பை, திலோத்தமை ஆகியோர்களின் நடனத் தைப் பார்த்து மகிழ்ந்த மிகுந்த கோபக்காரரான துர்வாச முனிவர் ஒரு பாரிஜாத மலர் மாலையை அவர்களுக்குப் பரிசாக அளித்தார்.

அவர்கள் அதனை தேவேந்திரனுக்குக்கொடுத் தனர். அவன் தன் வாகனமாகிய ஐராவதம் என்ற பெயருடைய யானையின் அருகில் அந்த மாலையுடன் சென்றான். அந்த மலர் மாலையின் நறுமணம் அதிகமாக இருந்ததால் வண்டுகள் வந்து யானைக்கு தொல்லை தந்தது. உடனே அந்த யானை மலர் மாலையை தும்பிக்கையால் பிய்த்து காலால் மிதித்து வீணாக்கியது. இந்த நிகழ்வினை பார்த்தார் . அந்த முனிவர். உடனே அவருக்கு மிகுந்த கோபம் வந்தது. ஒட்டு மொத்தமாக “தேவர்கள் அனைவரும் ‘நரை, திரை மூப்பு, மரணம் ஆகியவை பாதிக்கக்கடவாய்” என்று தேவர்களுக்கு ஒரு சாபத்தைக் கொடுத்தார். அதுவரை இளமையாக இருந்த தேவர்கள், திடீரென அனைவரும் சாபத்திற்கு ஆளாயினர். உடனே அவர்கள் அனைவரும் சேர்ந்து துர்வாசரிடம் சரணாகதி அடைந்து, சாபவிமோசனம் அருளக்கேட்டுக்கொண்டனர். அவரும் சாபவிமோசனத்தை அருளினார்.

முனிவர் கூறினார்: “மந்தரமலையை மத்தாக்கி வாசுகி என்ற சர்ப்பத்தை கயிறாக்கி பாற்கடலைக் கடைய வேண்டும். அப்பொழுது அமிர்தம் கிடைக்கும். அந்த அமிர்தத்தை உண்டால், நரை, திரை, மூப்பு, மரணம் எல்லாம் மாறி பழைய நிலை ஏற்படும்” என்று முனிவர் கூறினார்.

முனிவர் கூறியதுபோல் மந்தரமலையைக் கொண்டுவந்து மத்தாக்கினர். ‘ வாசுகி ’ என்ற சர்ப்பத்தைக் கொண்டுவந்து கயிறாக்கினர். வாசுகியின் தலைபாகம் தேவர்களும் வால்பாகம் அசுரர்களும் பிடித்துக்கொண்டு பாற்கடலை கடைய ஆரம்பித்தனர். கடையும்பொழுது கல்ப விருட்சம், காமதேனு முதலியவைகளும் லக்ஷ்மிதேவி மற்றும் ஏராளமான பொருட்கள் வந்தன. மேலும் கடைந்தனர். அதிக நேரம் கடைந்ததால் வாசுகி தளர்ந்தது.

அது ‘ஆலகால விஷத்’தைக் கக்கியது. அது ஒரு கொடிய விஷமாகையால், தரையில் விட்டால் உலகம் அழிந்து விடும் என்பதால், சிவபெருமான் தன் கைகளில் வாங்கி அவரே அருந்திவிட்டார். உடனே விஷ்ணு சிவபெரு மானுடைய வாயை மூடினார்; பார்வதி அவருடைய கழுத்தைப் பிடித்தார். அதனால் அந்த விஷம் வெளியே வராமலும் உள்ளே செல்லாமலும் கழுத் திலே நின்றுவிட்டது. கழுத்து நீலநிறமாகியது. அத னால் சிவபெருமானுக்கு ‘நீலகண்டன்’ என்ற பெயர் வந்தது என்கிறார்கள். மீண்டும் கடைந்தனர். அதன் பின்னர் அமிர்தம் வந்தது. அதனை எடுத்து தேவர்கள் உண்டனர். அவர்களுடைய குறை நீங்கியது. ஒருவர் செய்த தவறினால் தேவர்கள் அனைவரும் விளைவை அனுபவிக்க வேண்டிவந்தனர். இவ்வாறு தேவர்களுக்கு சாப விமோசனம் கிடைத்தாகக் கூறுகிறது இந்தக் கதை.

இந்த கதையில் ஓர் உண்மை அடங்கியுள்ளது. அதை ஆராய்ந்தால் தெரியவரும். இந்தக் கதை பெரும்பாலானோர்க்கும் தெரியும் என்று நினைக் கிறேன் பாற்கடல் என்றால் என்ன? அது எங்கே உள்ளது. அதைக் கடைவது எவ்வாறு? மத்து என்றால் என்ன? கயிறு என்றால் என்ன? யார் இந்த அசுரர்களும் தேவர்களும்? எனக்குத் தெரிந்த வரையில் மேற்கண்டவற்றைப் பற்றிக் கூறவிழைகின்றேன்.

பாற்கடல் என்பது நம் உடலில் உள்ளது. அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும்உள்ளது என்பர். அது நெற்றிக்கண் அல்லது புருவமத்தி. மத்து என்பது மனம். கயிறு என்பது இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன்உள்ள வைராக்கியம். தேவர்கள் என்றால் இறைவனைப் பற்றிய தொடர்ந்த சிந்தனை. அசுரர்கள் என்றால் மாயை யால் ஏற்படும்உலகப்பொருட்கள்பற்றிய எண்ணங்கள். ‘ஆலகால விஷம்’ என்றால் இறைவனின் சோதனைகளால் ஏற்படும்துன்பங்கள், ‘காமதேனு கல்ப விருட்சம்’ ஆகியவை தியானம் மூலமாக நாம் பெறப்படும் இறை அருட் செல்வங்கள்.

## நம் உடலில் உள்ள பாற்கடலைக்கடைவது எவ்வாறு

மனமாகின்ற மத்தினை நம் உடலிலுள்ளநெற் றிக்கண் அல்லது புருவமத்தியில் வைத்துஇறைவ னிடம் சரணாகதி அடைந்த ஆத்மா இறைவனை அடைய வேண்டும் என்றகுறிக்கோ ளுடன் உள்ள வைராக்கியம் என்ற கயிற்றினால் சுற்றி தியானம் செய்ய வேண்டும. தியானம் செய்வதைத்தான் இங்கு ‘கடைவது’ என்று சொல்கிறோம்.

அப்பொழுது அசுர்ர்களாகின்ற தீய எண்ணங்கள் (மாயை) மனித மனதை ஆட்கொள்ள முயற்சி செய்தும், தியானம் செய்வதைத் தடுக்கும். இறைவன்மேல் ஒருநிலைப்படுத்த விடாமல் மாயை நம் மனதை ஆட்கொள்ள நினைக்கும். ஆனால் வைராக்கியத்துடன் தியானம் செய் தால் இறைசக்தி மாயையை விரட்டிவிடும். அப்பொழுது நமக்குள் இருக்கும் இறைசக்தி மாயையை வெல்லும். எப்படியென்றால் வைராக் கியம், இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் இணைகிறது. அப்பொழுது இறை அருள் மாயையை வெல்லச் செய்கிறது.

இவ்வாறு தியானம் செய்யச் செய்ய, அதாவது பாற்கடலைக் கடையக் கடைய நம்முள்ளி லிருந்து நிறைய விஷயங்கள் தெரியவரும். அது இறை அருளேயாகும். அது கதையில் காம தேனு கல்பவிருட்சம் என்றெல்லாம் கூறுகின் றனர். இதற்கிடையில் கொடிய விஷம் போன்று, துன்பங்களாகின்ற சோதனைகள் வரத் தொடங்குகிறது. துன்பங்களாகின்ற அந்தச் சோதனைகளை இறைவனே தந்து அவற்றை அவனே திரும்ப எடுத்துக் கொள்வான்.

இதுதான் கதையில் கூறும் 'ஆலகாலவிஷம்’ கதையில் சிவபெருமானே அந்த விஷத்தை ஏற்றுக் கொள்கிறார் அல்லவா! தொடர்ந்து இடைவிடாமல் ஒவ்வொரு வேளையும் தியானம் செய்தால் தொடர்ந்து கடைந்தால் இறைவனே நம் துன்பங்கள் அனைத்தையும் துடைத்துவிடுவான். நாம் முறையாகவும் சரியாகவும் தியானம் செய்தால், இறுதியில், அமிர்த கும்பத்தை இறைவன் நமக்கு அருள்வான். நறுமணமும், மிகுந்த சுவையும் உடையதான அந்த அமிர்தத்தை நாம் பருகலாம்.

இவ்வாறு நறுமணமும் மிகுந்த சுவையுமுள்ள அமிர்தத்தை நாம் பருகினால் நரை, திரை, மூப்பு, மரணம் இவற்றைக் கடந்த மரணமற்ற பெருவாழ்வை நாம் வாழலாம். இறை அனுபூதி பெற்ற ஓர் ஆன்மாவின் நிலை இதுதான். இறை அனுபூதி பெற்ற ஆன்மா, என்றென்றும் இறைவனுடன் வாழ்ந்துகொண்டிருக்கும். ஓர் ஆன்மா முதலில் இறைவனிடத்தில் சரணாகதி அடைந்தால், இறுதியில் அதன் நற்பலன் இறை அனுபூதியே! இறைவனிடத்தில் சரணாகதி அடைந்த ஓர் ஆத்மாவிற்கு, உலகத்தின் முடிவில், உலகம் மற்றும் உலகப்பொருட்கள் மேலுள்ள பற்று, ஆசை இவை யாதும் இருக்காது. எப்பொழுதும் ‘இறைவா! இறைவா! ’ என்ற ஏக்கத்துடன், இறை வன் அருளி வழங்கிய சரீரமாகின்ற கூட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும். இந்தக் கூட்டை விட்டு வெளியேறி இறைவனிடம் செல்வதற்காக ஒவ்வொரு நிமிட நேரத்தையும் இறை நினைவிலேயே தள்ளிவிட்டுக் காத்திருக்கும். அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு இறைவன் சலுகைகள் அருள் வான். எப்படியானாலும் இறைவனைத்தவிர இந்த உலகமோ உலகப்பொருட்களோ இறை

அனுபூதி பெறுவதற்கு உதவாது என்பது, உண்மையில் இறைவனை நேசிக்கின்ற அவனைச் சரணடைந்த ஆத்மாவிற்குத் தெரியவரும். தியானமும்இறைவனும் மட்டும்தான் நமக்குஉதவும். எனவே அவனைத் தொடர்புகொள்வதால் மட்டுமே அவனை புரிந்துகொள்ளமுடியும். அதைத்தான் நாம் முக்கியமாகச் செய்ய வேண்டும். அதை கைவரப்பெறச்செய்ய அனைவரும் முயற்சிசெய்ய வேண்டும் என குருதேவர் உறுதியாகக் கூறுகிறார்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# மகாபாரதம்

வியாசரின் உருவ அமைப்பு கம்பீரமே வடிவானது என்று பாரதம் கூறுகிறது. அவர் விழியிலிருந்து வழிகின்ற அருள் ரசம் சிந்தனை தென்றலையும் அவர் ஜடாமுடியில் ஜொலிக்கும் ஞான அக்னி தவத்தின் மேன்மையையும் நமக்குக் காட்டுவதாக பாரதம் பறைசாற்றுகிறது.

பிள்ளைப் பிராயத்தில் கண்ண பரமாத்மா துள்ளிவிளையாடிய யமுனைநதி கரையோரத்தில் வியாசர் பிறந்தார். இவரை ஈன்றெடுத்த தாய் தர்மமே வடிவான சத்தியவதி ஆவாள். தகப்பனாரோ தவத்தின் மறுவடிவான பராசர மகரிஷி ஆவார். தர்மத்திற்கும் தவத்திற்கும் மகனாகப் பிறந்த வியாசர் அறிவுக் கடலாகவும், ஞானச்சுடராகவும் வாழ்ந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை.

இவர் நடைமுறை வாழ்க்கைக்கு உதவாத எதுவும் ஒழுக்க நெறியாக இருப்பதில் எந்த பயனும் இல்லை என்கிறார். எனவே தான் மகாபாரதம் முழுவதும் நெறியான ஒழுக்கத்தை தனியாக கட்டம் கட்டியும் சில கதைகள் மூலமாகவும் நாம் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகக் கூறுகிறார்.

கட்டுப்பாடின்றி நாலாதிசையும் அலைவது புலன்களின் இயல்பாகும். அப்படி அலைந்து திரிகின்ற புலன்களை மனம் என்னும் பட்டுக் கயிற்றால் கட்டி தர்மத்தின் வழி நிற்க செய்ய வேண்டும். தர்மம் என்றுமே அழிந்து போகாது. அது நிலையானது. அதே போன்றே ஆத்மாவும் நிலையானது உடல் மட்டும் தான் அழிந்து போகக் கூடியது. எனவே அழியாத உயிருக்கு மேன்மை தரக்கூடிய தர்மங்களை மட்டுமே மனிதன் செய்ய வேண்டும். அழிந்து போகும் உடலோடு கூடிய புலன்கள் விரும்பும் செயல்களைச் செய்து ஆத்மாவைக் கேவலப்படுத்தக்கூடாது என்பதே வியாசரின் கொள்கை இதுதான் மகாபாரத்தின் மையக் கருத்து

மகாபாரதம் ஒரு லட்சம் சுலோகங்களால் ஆன பெரிய நூலாகும். இதை அப்படியே எந்த மாற்றமும் செய்யாமல் அச்சு வடிவில் கொண்டு வந்தால் பத்தாயிரத்திற்கும் அதிக மான பக்கங்களைக்கொண்ட பெருநூல் தொகுதி யாகவே விரியும் இதில் பதினெட்டு பருவங்கள் உள்ளன. மேலும் சுமார் நூறு சிறிய பருவங்களும் உள்ளன. மிகப்புகழ் வாய்ந்த பகவத்கீதை மட்டு மல்லஅனுகீதை, பராசர கீதை போன்ற வேறுசில கீதை நூல்களும் இதில் அடங் கியுள்ளன.

மகாபாரதத்தில்எண்ணிக் கையில் அடங்காத கிளைக் கதைகள் பற்பல உள்ளது. அவற்றில் நளதமயந்தி வரலாறு, சத்தியவான் சாவித்திரி வரலாறு, ராமன் வரலாறு, துஷ் யந்தன் சகுந்தலை வரலாறு, அரிச்சந்திரன் வரலாறு, குசேலன் கதை, கந்தப்பெருமான் கதை,








பரசுராமன் கதை போன்றவைகள் குறிப்பிடத் தக்கதாகும். இவை தவிர ஏராளமான ரிஷிகள் முனிவர்களைப் பற்றிய விவரங்களும் நகுஷன் போன்ற அரசர்களைப் பற்றிய குறிப்புகளும் அடங்கியுள்ளது.

இனி கதைப்போக்கில் கூறப்பட்டுள்ள சம்பவங்களின் உள்ளார்த்தத்தை சற்று பார்ப்போம். மகாபாரதம் வெறுமனே குருவம்சத்தின் வரலாற்றைக் கூறுவதற்காக உருவான இதிகாசம் அல்ல வாழ்க்கை தத்துவங்கள் அனைத்தையும் எடுத்துக் காட்டுவதற்கு உருவான இதிகாசமாகும்.

இதனால்தான் இம்மாபெரும் இதிகாசம் நம்நாட்டிலுள்ள அனைத்து மக்களின் உள்ளங்களில் நீங்காத இடம்பெற்று அமரத் தன்மையோடு திகழ்வதோடல்லாது வெளிநாடுகளிலும் இதன் புகழ் பரவியுள்ளது. கிரேக்க நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு வருகை தந்த மெகஸ்தனிஸ் என்ற ராஜ தூதர் இதிலுள்ள சீரிய கோட்பாடுகளை அறிந்து இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே போற்றி புகழ்ந்திருக்கிறார். இதுமட்டுமல்ல 2500 ஆண்டுகளுக்கு முன்பு கம்போடிய நாட்டில் கட்டப்பட்ட ஆலயங்களில் மகாபாரதத்தை விளக்கும் சிற்பங்கள் அமைந்துள்ளது.

அதுமட்டுமல்லாது அந்த ஆலயங்களில் மகாபாரதம் முழுவதும் அக்காலத்தில் ஓதப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. துருக்கியிலும், மங்கோலியாவிலும் மகாபாரதத்தின் சிறப்பு மிக்க பகுதிகள் மொழி பெயர்க்கப்பட்டு மக்களால் வாசித்தறிய பட்டுள்ளது. சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே ஜாவா மொழியில் மகாபாரதம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இன்றைய சூழலிலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் ரஷ்யநாட்டிலும் மகாபாரதம் மிகவும் விரும்பி ஏற்கப்படுகிறது.

நமது நாட்டில் பேசப்படுகின்ற அனைத்து மொழிகளிலும் மகாபாரதம் எழுதப்பட்டுள்ளன. நம் தமிழகத்தைப்பொறுத்தவரை சங்ககால இலக் கியங்களுக்கு கடவுள் வாழ்த்து பாடிய பெருந்தேவன் என்ற புலவர் பெருந்தகை பாரதத் தை தமிழில் முதல் முறையாக மொழியாக்கம் செய்துள்ள தகவல் இருக்கிறது. அவர் எழுதிய தமிழ் மகாபாரத நூல் இன்று கிடைக்கவில்லை யென்றாலும் அவர் உள்ளிட்ட ஒன்பது பெரும்புலவர்கள் மகாபாரதத்தை தமிழில் பாடியுள்ளனர்.

மகாகவி பாரதியின் தேசப் பற்றுக்கு ஊக்கம் தரும் வகையிலும் வீர உணர்ச்சியை பெருக்கிடும் வகையிலும் பாரதம் உறுதுணை புரிந்துள்ளது. இதைச் சுப்ரமணிய பாரதியின் பாஞ்சாலி சபதம் உள்ளிட்ட அனைத்து கவிதைகளிலும் நாம் அறியலாம். மேலும் பழந்தமிழ் மன்னர்கள் மக்களிடத்தில் யுத்தகாலம் அல்லாத மற்றக் காலங்களில் வீர உணர்வு முனை மழுங்கிப்போகக்கூடாது என்பதற்காக பட்டி தொட்டி யெங்கும் பாரத மண்டபங்கள் கட்டி வைத்து தினசரி மகாபாரதத்தை மக்களுக்கு வாசித்துக்காட்டவும் வழிவகை செய்துள்ளனர்.

அதனாலேயே பழந்தமிழ் கலைகள் பலவற்றில் பாரதக்கதையே பின்புலமாக அமைந்துள்ளது. இன்று கூட தெருக்கூத்துகளிலும், சினிமாக்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் மகாபாரதம் நடித்து காட்டப் படும்போது மக்களிடத்தில் பெரும் வரவேற்பை பெறுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# வாழ்வை வளமாக்கும்

# ஜென்ம நட்சத்திரத்திற்குரிய கோயில்

நீங்கள் பிறந்த மாதத்தில் உங்களுக்குரிய ஜென்ம நட்சத்திரம் வரும் நாளில் தவறாமல் உங்களின் ஜென்ம நட்சத்திரம் அமைந்துள்ள கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று அபிஷேகம் செய்து, உங்கள் நட்சத்திரத்திற்கு ஏற்ற வஸ்திரத்தை சுவாமிக்கு அலங்காரப் படுத்தி புஷ்பம் மஞ்சள் குங்குமம்எண்ணெய் கோவிலுக்கு வாங்கி கொடுத்து, உங்கள் நட்சத்திர அதிபதியின் (கிரகத்தின்)எண்ணிக்கையின்படி அன்னாதானம் செய்து விட்டு வந்தால், உங்கள் நட்சத்திர தெய்வம் உங்களின் வாழ்க்கையை வளமாக்குவார்.

இந்த வழிமுறை முற்காலம்தொட்டு ஜோதிட வல்லுநர்களின் பரிகார முறையாக அமைந்துள்ளது. இதை செய்துப்பாருங்கள் பலன் நிச்சயம் கிடைக்கும்.

## அசுவினி

கோயில்: திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீஸ்வரர் கோயில்

அம்மன்: பெரியநாயகி

சிறப்பு: நோய்களுக்கு நிவாரணம்தரும் அசுவினி நட்சத்திர தேவதையும், மருத்துவ தேவதைகளும் இங்கு வழிபடுவதாக ஐதீகம். அசுவினி நட்சத்திர நாளில் இங்கு தன்வந்திரி ஹோமம் செய்தால் ஆரோக்கியம் நிலைக்கும்.

இருப்பிடம்: திருவாரூரிலிருந்து 30 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை6–11, மாலை4 இரவு8.

போன்: 94438 85316, 04369 222 392

## பரணி

கோயில்: நல்லாடை அக்னீஸ்வரர் கோயில்

அம்மன்: சுந்தரநாயகி

சிறப்பு: பரணி நட்சத்திரத்தினர் ஹோமம் நடத்தலாம். கார்த்திகை மாத பரணி மிகவும் சிறப்பு. மேற்கு நோக்கி சுவாமி இருப்பதால் சக்தி அதிகம்.

இருப்பிடம்: மயிலாடுதுறையிலிருந்து, நெடுங்காடு வழியாக காரைக்கால் செல்லும் வழியில் 15 கி.மீ., தூரத்தில் நல்லாடை.

திறக்கும் நேரம்: காலை 8 மதியம்12, மாலை 5 இரவு 8.30.

போன்: 94866 31196, 04364 285 341

## கார்த்திகை

கோயில்: கஞ்சாநகரம் காத்ர சுந்தரேஸ்வரர்

அம்மன்: துங்கபால ஸ்தனாம்பிகை

சிறப்பு: கார்த்திகையில் பிறந்தவர்கள் கார்த்திகை நட்சத்திரம் மற்றும் பிரதோஷ நாளில் தீபமேற்றி வழிபட வாழ்வு வளம் பெறும். கார்த்திகையில் பிறந்த கன்னிப்பெண்கள் அம்மனை வழிபட விரைவில் திருமணயோகம் கைகூடும்.

இருப்பிடம்: மயிலாடுதுறையிலிருந்து பூம்புகார் சாலையில் 8 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை10 11, மாலை45

போன்: 94874 43351, 04364 282 853.



## ரோகிணி

கோயில்: காஞ்சிபுரம் பாண்டவதூதப் பெருமாள் கோயில்

சிறப்பு: ரோகிணிதேவி, இத்தல பெருமாளை வழிபட்டு சந்திரனை அடையும் பேறு பெற்றாள். ரோகிணி நட்சத்திரத்தினர் புதன், சனிக்கிழமை, அஷ்டமிதிதி, 8ம் தேதிகளில் வழிபடுவது சிறப்பு.

இருப்பிடம்: காஞ்சிபுரம் பஸ் ஸ்டாண்டிலிருந்து ஒரு கி.மீ.,. ஏகாம்பரேஸ்வரர் கோயில் எதிரிலுள்ள சாலை.

திறக்கும்நேரம்: காலை 7 11, மாலை 4 இரவு 7.30.

போன்: 044 2723 1899.

## மிருகசீரிஷம்

கோயில்: எண்கண் ஆதிநாராயணப் பெருமாள் கோயில்

சிறப்பு: மிருகசீரிட நட்சத்திரத்தினர்,மிருகசீரிட நாளில் இங்கு வந்து வழிபட்டால் வாழ்வில் பிரச்னை நீங்கி சந்தோஷம் கூடும்.

இருப்பிடம்:தஞ்சாவூர் திருவாரூர் சாலையில் 50கி.மீ., தூரத்தில் முகூந்தனூர். அங்கிருந்து 1கி.மீ., தூரத்தில் எண்கண்.

திறக்கும்நேரம்: மாலை5 இரவு 7.

போன்: 94433 51528, 04366 269 965.

## திருவாதிரை

கோயில்: அதிராம்பட்டினம் அபயவரதீஸ்வரர் கோயில்

அம்மன்: சுந்தரநாயகி அம்மன்

சிறப்பு: திருவாதிரை நட்சத்திரத்தினர் இங்கு வழிபட்டால் தீர்க்காயுள், தைரியம் கிடைக்கும். அதீவீரராம பாண்டியர் திருப்பணி செய்ததால், இத்தலம் "அதிவீரராமன்பட்டினம்' என வழங்கியது. தற்போது அதிராம்பட்டினமாகி விட்டது.

இருப்பிடம்: தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டை 70கி.மீ., அங்கிருந்து 12 கி.மீ., தூரத்தில் அதிராம்பட்டினம்.

திறக்கும்நேரம்: காலை 6.30 12, மாலை4 இரவு 8.30.


ஆன்மிகமலர் மெயில் புக்
16-31 டிசம்பர் 2019 29
www.aanmeegamalar.com

போன்: 99440 82313, 94435 86451.

## புனர்பூசம்

கோயில்: வாணியம்பாடி அதிதீஸ்வரர்கோயில்

அம்மன்: பெரியநாயகி

சிறப்பு: கஷ்யப மகரிஷியின் மனைவி அதிதி, வாணியம்பாடியில் புனர்பூச நட்சத்திர நாளில் விரதமிருந்து தேவர்களுக்குத் தாயாகும் பாக்கியம் பெற்றாள். மேற்கு நோக்கிய இத்தலத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தினர் வழிபட்டால் சிறப்பான வாழ்வு அமையும்.

இருப்பிடம்: வேலூர் கிருஷ்ணகிரி சாலையில் 67கி.மீ., தூரத்தில் வாணியம்பாடி. அங்கிருந்து 3கி.மீ., தூரத்தில் கோயில்.

திறக்கும் நேரம்: காலை 6.30 10.30, மாலை 5 இரவு 7.

போன்: 99941 07395, 04174 226 652

## பூசம்

கோயில்: விளங்குளம் அட்சயபுரீஸ்வரர் கோயில்

அம்மன்: அபிவிருத்தி நாயகி

சிறப்பு: இங்கு மந்தா, ஜேஷ்டா ஆகிய தேவியருடன் சனீஸ்வரர் மணக்கோலத்தில் வீற்றிருக் கிறார். பூச நட்சத்திரத்தினர் பூசம் மற்றும் திரிதியை நாளில் இவருக்கு அபிஷேகம் செய்து எட்டுமுறை சுற்றி வர நோய் நீங்கும். திருமணயோகம் கைகூடும்.

இருப்பிடம்:பட்டுக்கோட்டையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் கிழக்கு கடற்கரைச் சாலையில் 30கி.மீ., தூரத்தில் விளநகர் விலக்கு. அங்கிருந்து தெற்கே 2கி.மீ, தூரத்தில் கோயில்.

திறக்கும்நேரம்: மாலை4 இரவு7.

போன்: 97507 84944, 96266 85051.

## ஆயில்யம்

கோயில்: திருந்துதேவன்குடி கற்கடேஸ்வரர் கோயில்

அம்மன்: அருமருந்துநாயகி, அபூர்வநாயகி

சிறப்பு:ஆயில்யம், தேய்பிறை அஷ்டமிநாளில் கற்கடேஸ்வரருக்கு நல்லெண்ணெய் சாத்தி வழிபட நன்மை பெருகும்.



இருப்பிடம்:கும்பகோணம்சூரியனார்கோயில் சாலையில் 11கி.மீ., தூரத்தில் திருவிசநல்லூர். அங்கிருந்து திருந்துதேவன்குடி 2கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை9 மதியம் 1.30, மாலை 4 இரவு7.

போன்: 99940 15871, 0435 200 0240

## மகம்

கோயில்: ஒடுக்கம் தவசிமேடை மகாலிங்கேஸ்வரர் கோயில்

அம்மன்: மாணிக்கவல்லி, மரகதவல்லி

சிறப்பு: மகம், பஞ்சமி, சஷ்டி, ஏகாதசி, துவாதசி, பிரதோஷம், மாதசிவராத்திரிநாளில் மகாலிங்கேஸ்வரருக்கு அபிஷேகம் செய்துவழிபட வாழ்வு வளம் பெறும். இங்கு மாணிக்கவல்லி, மரகதவல்லி அம்மன் சந்நிதிகள் உள்ளன. சிவ ராத்திரியை ஒட்டி 30 நாட்கள் காலை நேரத்தில் மூலவர் மீது சூரியஒளி விழுவது சிறப்பு.

இருப்பிடம்: திண்டுக்கல் நத்தம் சாலையில் 12 கி.மீ., தூரத்தில் விராலிப்பட்டி விலக்கு. அங்கிருந்து 2கி.மீ. தூரத்தில் கோயில்.

திறக்கும் நேரம்: காலை6 மாலை6.

போன்: 95782 11659, 93624 05382.

## பூரம்

கோயில்: திருவரங்குளம் ஹரிதீர்த்தேஸ்வரர் கோயில்

அம்மன்: பெரியநாயகி

சிறப்பு: பூர நட்சத்திர லோகத்தில் சிவ,நாக, ஞானபிரம்ம, இந்திர, ஸ்ரீ, ஸ்கந்த, குரு தீர்த் தங்கள் உள்ளன. திருவரங்குளத்திலும் இவை ஏழும் உள்ளன. பூர நட்சத்திரத்தினர் தங்கள் பிறந்தநாளில் இங்கு வழிபட்டால் வாழ்வில் மேன்மை பெறுவர்.

இருப்பிடம்:புதுக்கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை சாலையில் 7 கி.மீ.

திறக்கும்நேரம்: காலை7 மதியம்12, மாலை5 இரவு7.30

போன்: 98651 56430, 99652 11768

## உத்திரம்

கோயில்: இடையாற்றுமங்கலம் மாங்கல்யேஸ்வரர் கோயில்

அம்மன்: மங்களாம்பிகை

சிறப்பு: மணவாழ்வுக்காக காத்திருப்பவர்கள் இங்கு வழிபடுவது சிறப்பு. திருமணம்நிச்சயித்த பின், மாங்கல்ய மகரிஷிக்குவெற்றிலை பாக்கு டன் கல்யாண பத்திரிகை வைத்து வேண்டிக் கொள்கின்றனர். உத்திர நட்சத்திரத்தினர் வழிபட்டால் தீர்க்க சுமங்கலி பாக்கியம் பெறுவர்.

இருப்பிடம்: திருச்சி சத்திரம் பஸ் ஸ்டாண்டிலிருந்து 22கி.மீ., தூரத்தில் லால்குடி. அங்கிருந்து இடையாற்று மங்கலம் 5 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை 8 மதியம்12, மாலை6 இரவு 8.

போன்: 98439 51363, 0431 254 4070.

## அஸ்தம்

கோயில்: கோமல் கிருபா கூபாரேஸ்வரர் கோயில்

அம்மன்: அன்னபூரணி

சிறப்பு: அஸ்த நட்சத்திரத்தினர் திங்கள், புதன்கிழமையில் வழிபடுவது நல்லது. அன்னபூரணி அம்பிகை பசுவாக இங்கு வந்ததால் பசு,கன்று தானம் அளிப்பது சிறப்பு.

இருப்பிடம்: கும்பகோணம் மயிலாடுதுறை சாலையில் குத்தாலத்திற்குப் பிரியும் இடத்தில் இருந்து 8கி.மீ., தூரத்தில் கோமல்.

திறக்கும்நேரம்: காலை7 மதியம்12, மாலை 5.30 இரவு 7.30.

போன்: 95002 84866

## சித்திரை

கோயில்: குருவித்துறை சித்திரரத வல்லப பெருமாள்

தாயார்: ஸ்ரீதேவி, பூதேவி

சிறப்பு: பிரகஸ்பதிக்கு அருள்புரிய விஷ்ணு, சித்திர ரதத்தில், சித்திரை நட்சத்திரத்தன்று எழுந்தருளினார். எனவே, இக்கோயில் சித்திரைக்குரியதானது. வியாழன், பவுர்ணமி, சித்திரை நட்சத்திர நாட்களில் தரிசிப்பது சிறப்பு.

இருப்பிடம்: மதுரையிலிருந்து 23 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை 7.30 மதியம் 12, மாலை 3 6.

போன்: 94439 61948, 97902 95795.

## சுவாதி

கோயில்: சித்துக்காடு தாத்திரீஸ்வரர் கோயில்

அம்மன்: பூங்குழலி

சிறப்பு: சுவாதி நட்சத்திரத்தினர் இங்கு சிவனை வழிபட்டால் செல்வ வளமிக்க வாழ்வு உண்டாகும். திருமணயோகம் விரைவில் கைகூடும். இங்கு குபேரருக்கு நெல்லிக்காய் ஊறுகாயுடன், தயிர்சாதம், புளியோதரை படைத்து வழிபட்டால் யோகவாழ்வு அமையும்.

இருப்பிடம்: சென்னை பூந்தமல்லி தண்டுரை வழியில் 8 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை8 10, மாலை 57

போன்: 93643 48700, 9382684485.

## விசாகம்

கோயில்: பண்பொழி திருமலை குமாரசுவாமி கோயில்

சிறப்பு: விசாகம் என்றால் "மேலான ஜோதி'. இந்த நட்சத்திரத்தின் ஒளிக்கிரணங்கள் இம்மலையில் படுவதால் விசாக நட்சத்திரத்தினர் வழிபட்டால் வாழ்வில் நல்ல திருப்பம் உண்டாகும்.

இருப்பிடம்: மதுரையிலிருந்து செங்கோட்டை 155 கி.மீ.,அங்கிருந்து7கி.மீ., தூரத்தில் கோயில்.

திறக்கும்நேரம்: காலை6 மதியம் 1, மாலை 5, இரவு 8.30.

போன்: 04633 237 131, 237 343.

## அனுஷம்

கோயில்: திருநின்றியூர் மகாலட்சுமிபுரீஸ்வரர் கோயில்

அம்மன்: உலகநாயகி

சிறப்பு: பூமியில் புதைந்துபோன சிவலிங்கம், சோழமன்னனால் கண்டறியப்பட்டு ஒரு அனுஷ நட்சத்திரத்தன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனவே இக்கோயில் அனுஷத்திற்கு உரிய தானது. அனுஷ நட்சத்திர ஆண்கள் துவா தசி திதியன்றும், பெண்கள் வரலட்சுமி பூஜையன்றும் சிறப்பு வழிபாடு செய்தால் செல்வவளம் உண்டாகும்.

இருப்பிடம்: மயிலாடுதுறை சீர்காழி வழியில் 7 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை6 11, மாலை 4 இரவு 8.

போன்: 04364 320 520

## கேட்டை

கோயில்:பசுபதிகோயில் வரதராஜப்பெருமாள் கோயில்

தாயார்: பெருந்தேவி

சிறப்பு: பெரியநம்பியின் திருநட்சத்திர வைபவம் சிறப்பாக நடக்கும். கேட்டை நட்சத்தி ரத்தினர் வழிபட்டால் நல்வாழ்வு கிடைக்கும். கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் செவ்வா யன்று வரும் கேட்டையில் வழிபடுவது சிறப்பு.

இருப்பிடம்: தஞ்சாவூர் கும்பகோணம் வழியில் 13கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை7 9, மாலை 5.30 7.30.

போன்: 97903 42581, 94436 50920

## மூலம்

கோயில்: மப்பேடு சிங்கீஸ்வரர் கோயில்

அம்மன்: புஷ்பகுஜாம்பாள்

சிறப்பு: மூலநட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பிரதோஷத்தன்று இங்கு வழிபடுவது சிறப்பு. இங்குள்ள நவவியாகரண கல் மீது ஏறி, நந்தியையும், மூலவரையும் ஒரே சமயத்தில் தரிசித்தால் ஆரோக்கியம் மேம்படும்.

இருப்பிடம்: சென்னை கோயம்பேடு தக் கோலம் வழியில் 45 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை6 10, மாலை 5.30 இரவு 7.30.

போன்: 94447 70579, 94432 25093

## பூராடம்

கோயில்: கடுவெளி ஆகாசபுரீஸ்வரர் கோயில்

அம்மன்: மங்களாம்பிகை

சிறப்பு: இத்தலம் பூராடம் நட்சத்திரத்திற் குரியது. ஆகாயவெளியில் உள்ள அனைத்து தேவதைகளும் பூராடத்தன்று இங்கு வழிபடுவ தாக ஐதீகம். அன்று சிவனுக்கு புனுகு சாத்தி வழிபட திருமண, தொழில்தடை நீங்கும்.

இருப்பிடம்: தஞ்சாவூரில் இருந்து திருவையாறு 13 கி.மீ., அங்கிருந்து கல்லணை வழியில் 4 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை910, மாலை 56, பூராடத்தன்று: காலை 8 மதியம்1.

போன்: 94434 47826, 96267 65472

## உத்திராடம்

கோயில்: கீழப்பூங்குடி பிரம்மபுரீஸ்வரர் கோயில்

அம்மன்: மீனாட்சியம்மன்

சிறப்பு: இங்குள்ள மீனாட்சி அம்மனின் நட்சத்திரம் உத்திராடம். இதில் பிறந்தவர்கள் பிரம்மபுரீஸ்வரரையும், மீனாட்சியையும் உத்திராடத்தன்று வழிபட வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். பவுர்ணமியன்று சிவனுக்கு விசேஷ பூஜை நடக்கும்.

இருப்பிடம்: மதுரையிலிருந்து 45கி.மீ., சிவகங்கையிலிருந்து காரைக்குடி செல்லும் வழியில் ஒக்கூர் 12கி.மீ., அங்கிருந்து கீழப்பூங்குடி 3 கி.மீ.,

திறக்கும் நேரம்: காலை7 11, மாலை 5 இரவு8

போன்: 99436 59071, 99466 59072

## திருவோணம்

கோயில்: திருப்பாற்கடல் பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில்

தாயார்: அலர்மேலுமங்கைத் தாயார்

சிறப்பு: திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திருவோணம், மூன்றாம்பிறை ஆகிய நாட்களில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து வழிபட நினைத்தது நிறைவேறும்.

இருப்பிடம்: வேலூர் சென்னை வழியில் 20கி.மீ., தூரத்தில் காவேரிப்பாக்கம். இங்கிருந்து 2 கி.மீ., தூரத்தில் கோயில்.

திறக்கும்நேரம்: காலை 7.30 மதியம் 12, மாலை 4.30 இரவு 7.30

போன்: 94868 77896,04177 254 929

## அவிட்டம்

கோயில்: கீழ்க்கொருக்கை பிரம்மஞானபுரீஸ் வரர் கோயில்

அம்மன்: புஷ்பவல்லி

சிறப்பு: அவிட்ட நட்சத்திரத்தன்று பிரம்ம ஞானபுரீஸ்வரர், பிரம்மாவுக்கு ஞானம் தந்ததால் இத்தலம் அவிட்டத்திற்கு உரியதானது. இந்த நட்சத்திரத்தினர் ஆவணி அவிட்டத்தன்று அடிப்பிரதட்சிணம் செய்து வழிபட்டால் யோக வாழ்வு அமையும்.

இருப்பிடம்: கும்பகோணத்திலிருந்து 4 கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை11 மதியம்1, மாலை5 மாலை 6

போன்: 98658 04862, 94436 78579

## சதயம்

கோயில்: திருப்புகலூர் அக்னிபுரீஸ்வரர் கோயில்

அம்மன்: கருந்தார் குழலி

சிறப்பு: திருநாவுக்கரசர் தன் 81ம் வயதில் சித்திரை சதய நாளில் இங்கு சிவனோடு இரண்டறக் கலந்தார். இதை ஒட்டி பத்து நாட்கள் திருவிழா நடக்கும். சதய நட்சத்திரத்தினர் இங்கு வழிபட்டால் ஆயுள், ஆரோக்கியம், செல்வவளம் உண்டாகும்.

இருப்பிடம்: திருவாரூர் மாவட்டம் நன்னிலம் நாகப்பட்டினம் வழியில் 10கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை 6 மதியம்12, மாலை 4 இரவு9

போன்: 04366 236 970

## பூரட்டாதி

கோயில்: ரங்கநாதபுரம் திருவானேஸ்வரர் கோயில்

அம்மன்: காமாட்சி

சிறப்பு: பூரட்டாதியன்று திருவானேஸ்வரரை வழிபட்டு ஏழு வண்ண ஆடைகளை ஏழைகளுக்கு தானம் அளித்தால் புத்திகூர்மை உண்டாகும். திருமணம், வேலைவாய்ப்பு தடையின்றி நடந்தேறும்.

இருப்பிடம்: தஞ்சாவூரிலிருந்து திருவையாறு 20 கி.மீ., இங்கிருந்து திருக்காட்டுப்பள்ளி 17கி.மீ., அங்கிருந்து அகரப்பேட்டை வழியில் 2கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை79, மாலை 5.30 இரவு 7

போன்: 94439 70397, 97150 37810

## உத்திரட்டாதி

கோயில்: தீயத்தூர் சகஸ்ர லட்சுமீஸ்வரர் கோயில்

அம்மன்: பெரியநாயகி

சிறப்பு: உத்திரட்டாதி நட்சத்திரத்தில் அவதரித்த தேவசிற்பி விஸ்வகர்மா, ஆங்கிரஸர், அக்னி புராந்தக மகரிஷி ஆகியோர் அரூபவடிவில் சகஸ்ரலட்சுமீஸ்வரரை தரிசிக்க உத்திரட்டாதி நாளில் வருவதாக ஐதீகம். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பொங்கல் நைவேத்யம் செய்ய பணக்கஷ்டம் தீரும். செயல்பாடுகளில் தடை நீங்கும்.

இருப்பிடம்: புதுக்கோட்டையிலிருந்து ஆவுடையார்கோயில் 40கி.மீ., அங்கிருந்து திருப்புனவாசல் செல்லும் வழியில் 21கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை6 மதியம் 12

போன்: 99652 11768, 04371239 212

## ரேவதி

கோயில்: காருகுடி கைலாசநாதர் கோயில்

அம்மன்: பெரியநாயகி

சிறப்பு: ரேவதி நட்சத்திர தேவதை அரூப வடிவத்தில் (உருவமின்றி) தினமும் சிவனை வழிபடுவதாக ஐதீகம். ரேவதி நட்சத்திரத்தினர் இங்கு சுவாமிக்கு பாலாபிஷேகம் செய்து வழிபட நினைத்தது விரைவில் நிறைவேறும். தடைபட்ட சுபநிகழ்ச்சிகள் இனிதே நடக்கும்.

இருப்பிடம்: திருச்சியிலிருந்து முசிறி 40கி.மீ, இங்கிருந்து தாத்தய்யங்கார் பேட்டை 21கி.மீ., அங்கிருந்து காருகுடி 5கி.மீ.,

திறக்கும்நேரம்: காலை6 11, மாலை5 இரவு8

போன்: 97518 94339, 94423 58146


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.
தொடர்பு கொள்ளவும்
08825844033



# தெளிவும் தெளிவுத்தன்மையும்

கடவுள் என்பது முன்கூட்டியே கொள்ளப்படுகின்ற ஒரு தத்துவம். இது நிச்சயமாக பஞ்சபூத முடிவும் இல்லை. ஆவேசம் கொள்ளுதல் என்ற நிலையும் இல்லை. ஒரு குறிப்பிட்ட தனிப்புத்தகமும் அல்ல.

❖❖❖

எப்படியும் இல்லை என்றால் உன்னுடைய சுத்தமான நினைவுப் பிரக்ஞையை உணரும் சக்தி தானே உனது கடவுள் அல்லது உனது சுத்தமான நினைவுத்தன்மை இல்லையா? இல்லவே இல்லை. நமது நினைவுத்தன்மையை தனியாக எடுத்து உணருகின்ற வேறொரு உறுதியான நிலையே கடவுளின் நிலை ஆகும்.



❖❖❖

கடவுளின் உறுதியான எண்ணநிலையை அல்லது அவனது நினைவை யாருமே அறிய மாட்டார்கள். தெரிந்து கொள்ளவும் மாட் டார்கள். இதுதான் கடவுளின் தனித்தெய்வீகம்.

❖❖❖

தெய்வீகத்தன்மை என்பது ஒரு மனிதனின் பிரத்யேகத்தன்மை ஆகும். அதன் சீர் சிறப்பு என்ற செல்வத்தன்மைகள் எல்லாம் ஒரு மனிதனின் அற்புத குணவெளிப்பாட்டின் எடை காட்டும் தன்மையை காட்டுகிறது.

❖❖❖

தெளிவும் தெளிவுத்தன்மையும் ஆண்டவனின் நீதிக்கட்டளை கள். இந்த இரண்டு வார்த்தைகளுக்கு சமமான வார்த்தைகளே கிடையாது. அதனால் தெளிவுத்தன்மை என்பதும் தெளிவான மக்கள் என்பவர்களும் உண்மையின் நீதிபதிகளாக ஆகிறார்கள்.

❖❖❖

நிறைவேற்றப்படுகின்ற கொள்கை என்றால் என்ன? கொள்கை என்பதே அதுதான். அதுவே நிறைவேற்றப்படும்பொழுது சிந்தனை என்று ஆகிறது. சிந்தனை என்பது கொள்கைகளை நினைக்கும்பொழுது தானாகத் தோன்றுகின்ற கொள்கையே அல்ல. ஏனென்றால் கொள்கையை சிந்தனை வடிவமாகவும் எண்ண நினை வாகவும் ஒன்றையே இரண்டுமுறை சிந்தித்து முடிவெடுக்க வழியே இல்லை. ஒன்று எண்ணம். மற்றொன்று வடிவம். இரண்டும் வேறு வேறு.

❖❖❖

மிகவும் மேன்மையாய் கூடி சிந்திக்கின்ற ஒரு சிறிய குழுவை கொண்டதே கொள்கையை நிறைவேற்றுகின்ற கழகமாகும். சிந்தனைக்கு என்று ஏற்படுத்தப்பட்ட கழகம் எப்போதும் சிந்திக் கின்றது. நாட்டுக்கு செம்மையைத் தருவிக்கின்றது.

❖❖❖

ஒரு நாட்டின் இயற்கையான எல்லைகள் நம்மால் வகுக்கப்படுவதில்லை. அது கடவுளால் ஏற்கனவே வகுக்கப்பட்டு விடுகிறது. இதுதான் ஆப்பிரிக்கா, இதுதான் இந்தியா என்பதைப் போன்றது. மனிதன்தான் இனி அந்நாட்டுக்குள் இருக்கின்ற உண்மைகளை வெளிக்கொணர்ந்து அதை உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

உணவே ஒரு இறைதத்துவம்

# குப்பை உணவை விட்டுவிட்டு ஸாத்வீக உணவை பின்பற்றவும்

பல்கலைகழக மானிய ஆணையம் சமீபத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதாவது பல்கலைகழக வளாகத்தில் உடலுக்கு கேடு விளைவிக்கும் உணவுப் பண்டங்களை (junk food) முழுவதுமாக தடை செய்ய வேண்டும் என்பதே அது.

சீன உணவு மற்றும் வேண்டாத உணவு வகைகளை விற்பனை செய்யும் தள்ளுவண்டிகளை முதல்படியாக வெளியேற்ற வேண்டும். அதிகாரிகள் மாணவர்களின் ஆரோக்கியத்திற்காக எடுத்த இந்த முடிவு மிகவும் பாராட்டுதற்குரியது. இருந்தாலும் இது வேண்டாத உணவு வகைகளை மாணவர்களின் வாழ்க்கையிலிருந்தே வெளியேற்றியது ஆகாது. எனவே நிர்வாகம் கடுமையாக நடவடிக்கை எடுத்து தேசத்தின் எல்லாப் பகுதியிலும் இந்தத் தகாத உணவு விற்பனை செய்யும் தள்ளுவண்டிகள் மீது தடை ஏற்பட முயற்சிக்க வேண்டும்.

இம்மாதிரி உணவுவகைகள் மனிதவர்க்கத்தின் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிப்பனவை ஆகும். இம்மாதிரி உணவு வகைகள் புத்திகூர்மையை மழுங்கச் செய்து உடலில் தேவையற்ற வாயு, கொழுப்பு போன்றவற்றை தேக்கி அந்த ஜீவனை சோம்பலும் மந்தமும் உள்ளவனாக ஆக்குகிறது. தற்காலத்தில் இளைஞர்கள், யுவதிகள் போன்றவர்கள் மட்டுமல்லாது பள்ளி சிறுவர், சிறுமியரும் கூட இந்தப் பழக்கத்தின் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

ஸாத்வீக, சத்துள்ள உணவுகளை உண்பது தற்காலத்தில் குறைந்து இம்மாதிரி உடலுக்கு கேடு விளைவிக்கும் உணவுப் பண்டங்களை உண்பது அதிகரித்திருக்கிறது. இம்மாதிரி உடலுக்கு கேடு விளைவிக்கும் உணவு வகைகளை நாடு முழுவதும் முழுமையாக புறக்கணிக்காமல் பல்கலைகழக வளாக அளவில் மட்டுமே தடுப்பது பெரிய நன்மையை விளைவிக்காது. ஏனெனில் பல்கலைகழக வளாகத்தில் தடுக்கப்பட்ட அதே உணவு வகைகளை மாணவர்கள் மற்ற இடங்களில் உண்ணக்கூடிய வாய்ப்பு உள்ளது.




எனவே நாடு முழுவதும் இது புறக்கணிக் கப்பட வேண்டிய ஒன்றாகும். மனோபலத்தையும் உடல் வலுவையும் பாதிக்கும் இத்தகைய உணவு வகைகளால் தற்கால இளம் தலைமுறையினர் கவரப்பட்டு பாதிக்கப்படுகின்றனர்.

உடல் தீவிர வியாதிகளால் பீடிக்கப்படும் வரை இந்த உண்மை தெரிந்திருந்தும் நொறுக்குத் தீனி தின்னும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அந்தப் பழக்கத்தை நிறுத்து வதில்லை. வாழ்க்கை அனுபவிப்பதற்கே என்ற கண்ணோட்டத்தில் இந்த பழக்கம் மேற் கொள்ளப்படுகிறது.

தற்காலத்தில் உணவே ஒரு இறைதத்துவம் என்பதை பெரும்பாலோர் தெரிந்து கொள் ளாமல் இருக்கிறார்கள். உணவு உடலுக்கு போஷாக்கை தருவதாக இருக்க வேண்டும் என்று ஆயுர்வேதம் சொல்கிறது. உணவு உண் பதே ஒரு யக்ஞத்திற்கு ஒப்பான செயல் என ஹிந்து தர்மம் போதிக்கிறது.

மேலும் ஆன்மீக பயிற்சி செய்வதற்கு உடலை நாம் நல்ல ஆரோக்கியமான நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் ஹிந்து தர்மம் உபதேசிக்கிறது. ஆனால் தற்காலத்தில் இந்த உயர்ந்த உபதேசங்கள் மக்களால் மறக்கப்பட்டு விட்டது. தங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்து கொள்வதற்காக இத்தகைய தகாத உணவுவகைகள், மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டவை என்று சொன்னால் அது தவறாகாது.

இந்த உண்மையை அறிந்திருந்தாலும் தகாத உணவுவகைகளை உண்ண வேண்டும் என்ற விருப்பம் ஒரு மனிதனின் ஆரோக்கியமற்ற மனநிலையையே காட்டுகிறது.

இதற்கு ஒரு நல்ல முடிவு என்னவென்றால் இத்தகைய உணவு வகைகளைத் தவிர்த்து ஆயுர்வேதத்தை ஏற்பதே ஆகும். உடலின் தன்மைக்கு மாத்திரமல்லாது மனம், புத்தி இவற்றின் நல்ல நிலைக்கும் ஆயுர்வேதம் ஸாத்வீக உணவை வலியுறுத்துகிறது. ஒருவரின் குணங்கள், நடத்தை ஆகியவற்றுக்கும் அவன் உட்கொள்ளும் உணவே அடிப்படையாக அமைகிறது என்று சொல்லப்படுகிறது.

ஆரோக்கியமான மனம், புத்தி, உடல் ஆகிய வற்றை விரும்பினால் அதற்கு நல்ல உணவு உட்கொள்வது மிக மிக அவசியமாகும். உணவு போஷாக்கானதாக இருக்க வேண்டுமானால் உணவு விளையும் பூமி வளமுள்ளதாகஇருக்க வேண்டும். தகாத உணவு வகைகளின் வலையிலிருந்து தப்புவதற்கு ரசாயனஉரங்க ளும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளும் தவிர்க்கப்பட வேண்டும். இதை செய்வதற்கு தற்கால அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே உண்மையாகவேபக்குவப்பட்ட ஆரோக்கியமான தலைமுறையினரை உருவாக்க முடியும்.

திருமதி ப்ராஜக்தா பூஜார், புனே.

மேலும் விவரங்களுக்கு:
hindujagruti தொ.எண்: 9380940626

# திருமாலின் திருச்சிலம்பிலிருந்து உற்பத்தியாகும் தீர்த்தம்

பழமுதிர்சோலை முருகன் கோவிலிலிருந்து சிறிது தூரத்தில் வேட்டுவர் குலத் தெய்வமான ராக்காயி கோவில் இருக்கிறது. இங்கு நூபுரக கங்கை தீர்த்தம் விழுகிறது. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இதன் உற்பத்தியிடம் எவ்வளவு ஆராய்ச்சிகள் செய்த போதிலும் இன்றுவரை கண்டுப்பிடிக்க முடியவில்லை. திருமாலின் திருச்சிலம்பிலிருந்து உற்பத்தியாகி வருவதாகக் கூறுவர். இச்சுனை மலை உச்சியிலிருந்து வரும்போது சூரிய ஒளியால் பலவிதங்களில் ஒளிரும்.



யானை துதிக்கைப் போல பருமனாக கோமுகியின் வழியாக மாதவி மண்டபத்தில் வந்து விழுகின்றது, இத்தீர்த்தத்தில் இரும்பு சத்தும், தாமிர சத்தும் அதிகம் இருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் சொல்கிறது. நோய்கள் தீர்க்கும் சக்திக் கொண்டதாக இத்தீர்த்தம் விளங்குவதால், இத்தீர்த்தத்தில் நீராடல் மிகவும் புகழ் பெற்று விளங்குகிறது. இத்தீர்த்தம் தெற்கு நோக்கி பாயும்போது சிலம்பாறு என பெயர் பெறுகிறது.

# மன அமைதிக்கு ஏற்ற ஆசனம்



இந்த ஆசனத்தை தினமும் ஐந்து நிமிடங்கள் செய்து வந்தால், மனம் சாந்தப்படும், ஜீரணப் பிரச்சனைகள் தீரும், இடுப்பு எலும்புகள், முதுகு எலும்புகளை விரியச் செய்து இறுக்கத்தை தளரச் செய்யும், இடுப்பு வலி எளிதாக தீரும். பணிக்குச் செல்லும் பெண்களுக்கும், கம்ப்யூட்டர் அதிகம் பயன்படுத்துபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளது இந்த ஆசனம்.





aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர்.காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்

# மனிதர்களை மிருகமாக்கும் 21 குணங்கள்

நல்ல மனிதர்களையும் 21 வகையான கெட்ட குணங்கள் தீயவனாக்குவதாக வேதங்கள் கூறுகின்றன. அவைகள்:

1. தற்பெருமை கொள்ளுதல்
2. பிறரைக் கொடுமை செய்தல்
3. கோபப்படுதல்
4. பிறரைப் போலவே வாழ ஆசைப்பட்டு, அதற்கேற்ற பாவனை செய்தல்.
5. பிறர் துன்பத்தைக் கண்டு சந்தோஷப்படுதல்
6. பொய் பேசுதல்
7. கெட்ட சொற்களைப் பேசுதல்
8. நல்லவர் போல் நடிக்கும் இரட்டை வேட மனப்பான்மை
9. புறம்பேசுதல்
10. தகாதவர்களுடன் சேருதலும், ஆதரவு கொடுத்தலும்
11. பாரபட்சமாக நடத்தல்
12. பொருத்தமற்றவர்களைப் புகழுதல்
13. பொய்சாட்சி கூறுதல்
14. எளியோரையும், வலிமை குறைந்தோரையும் கேலி செய்தல்
15. வாக்குறுதியை மீறுதல்
16. சண்டை, சச்சரவு, வாக்குவாதம்செய்தல்
17. குறை கூறுதல்
18. வதந்தி பரப்புதல்
19. கோள் சொல்லுதல்
20. பொறாமைப்படுதல்
21. பெண்களை தீய நோக்குடன் பார்த்தல்.




Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com